விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 08 புதன்கிழமை (21.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 154




# புலிகளின் மூத்த தளபதி பிரிகேடியர் பால்ராஜ் சாவு



## விடுதலைப் புலிகள் அறிவிப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் முக்கிய இராணுவத் தளபதிகளில் ஒருவராகிய பிரிகேடியர் பால்ராஜ் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு மாரடைப்பால் சாவடைந்தார் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். புலிகளின் குரல் வானொலி தனது இரவுச் செய்தியைத் தொடர்ந்து இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. இவரது மறைவையடுத்து மூன்று தினங்கள் துக்க தினங்களாக அனுஷ்டிக்கப்படும் என விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் கிளைமோர் பொதுமகன் உயிரிழப்பு

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் படையினரின் ஆழஊடுருவும் அணியினர் நேற்று நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என கிளிநொச்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாந்தை கிழக்கு பனங்காமத்தில் உள்ள கொம்புவைத்தகுளம் பகுதியில் நேற்று முற்பகல் வேளையில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர்மீது இக் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் பொதுமகனான பாக்கியநாதன் மோகனகாந்தன் என்பவர் கொல்லப்பட்டுள்ளார். (ச-5)

## மன்னாரில் பாரிய சுற்றிவளைப்பு 50ற்கும் அதிகமானோர் கைது

(மன்னார்)

மன்னாரில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலையடுத்து மன்னார் சவுத்பார் படை முகாமை அண்மித்துள்ள பகுதிகளில் பாரிய சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

இச் சுற்றிவளைப்பின் பின் 50ற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 36 பேரைத் தொடர்ந்தும் தடுத்து வைக்கும்படி பொலிஸாருக்குப் படையினர் உத்தரவு பிறப்பித்துள்ள (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பிள்ளையான் லண்டன் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தன், ஜூன் மாதம் லண்டன் பயணமாகவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜூன் மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டன் செல்வதற்கான பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் ஜனாதிபதி மகிந்த தன்னுடன் பிள்ளையானையும் அழைத்துச் சென்று முக்கிய கூட்டங்களில் பங்கேற்கச் செய்வது, சிறப்பாக இருக்குமென இலங்கை இராணுவத்தின் உளவுப் பிரிவு அறிவுரை வழங்கியுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பிடிக்க இலங்கை கடும் பிரயத்தனம்

### ஐ.நா. பொதுச் சபையில் இன்று தேர்தல்

(கொழும்பு)

இலங்கையின் பெயரை அனைத்துலக மட்டத்தில் தீர்மானிக்கப் போகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை உறுப்பினர்களுக்கான தேர்தல் இன்று ஐக்கிய நாடுகள் பொது சபையில் நடைபெற உள்ளது.

47 பேர் கொண்ட மனித உரிமைகள் சபையில் 15 இடங்களுக்கான தேர்தலே இன்று நடைபெற உள்ளது. இந்த 15 இடங்களில் ஆசியப் பிராந்தியத்துக்கான 4 இடங்களுக்கு ஆசியாவைச் சேர்ந்த 6 நாடுகள் போட்டியிடுகின்றன.

போட்டியில் களமிறங்கியுள்ள இலங்கை, பாகிஸ்தான், ஜப்பான், தென்கொரியா, கிழக்குத் திமோர், பஹ்ரெய்ன் ஆகியவற்றில் பஹ்ரெய்னும் கிழக்கு திமோரும் முதல் தடவையாக மனித உரிமைகள் சபைக்கான தேர்தலில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல் நடைமுறை

மனித உரிமைகள் சபைக்கான 47 ஆசனங்களில் ஆபிரிக்க (06ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் காவலரண் மீது வவுனியாவில் கைக்குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண் மீது நேற்றுக் காலை இடம்பெற்ற (10 ஆம் பக்கம் பார்க்க)

## ☞ உள்ளே...

தரம் – 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்.

பகுதி II வெள்ளிக்கிழமை வெளிவரும்.

## தமிழ் மக்கள் கடத்தப்படும் சம்பவங்களை நிறுத்தாவிடின் போராட்டம் ஆரம்பமாகும்

### ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் தமிழ் மக்கள் கடத்தப்படும் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளன. இத்தகைய கடத்தல்களை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையேல் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக எமது போராட்டம் ஆரம்பமாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரும் கண்டி மாவட்ட எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கடத்தல்கள், (10 ஆம் பக்கம் பார்க்க)

## வெசாக் வாரத்தை முன்னிட்டு 3 நாள்கள் ஊரடங்கு தளர்வு


வெசாக் வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 23,24 மற்றும் 25 ஆம் திகதிகளில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படவுள்ளதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக யாழ்.இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி படைத் தளபதிகளுடன் நேற்று ஆலோசனை நடாத்தியுள்ளார்.

வெசாக் வாரத்தை முன்னிட்டு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் எதிர்வரும் 23,24 மற்றும் 25 ஆம் திகதிகளில் இரவு விசேட கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதனை முன்னிட்டு ஊரடங்கு தளர்த்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கலை நிகழ்வுகளுக்கென கொழும்பிலிருந்து விசேட இசைக் கலைஞர்கள் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-5)

# சேவாக் அதிரடி டில்லி அணி வெற்றி



(பெங்களூர்)

சேவாக்கின் அதிரடி கைகொடுக்க டில்லி டேர் டேவில்ஸ் அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை வீழ்த்தியது.

இவ் வெற்றியின் மூலம் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணி தான் ஆடிய 12-வது ஆட்டத்தில் 6-வது வெற்றியை பெற்று அரையிறுதிக்கு நுழையும் வாய்ப்பை வலுப்படுத்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது-20 தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினமிரவு பெங்களூரில் நடைபெற்ற லீக் சுற்றின் 43-வது ஆட்டத்தில் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் டிராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சேவாக் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி, மிஸ்பா உல் ஹக் கோஸ்வாமியின் சிறப்பான ஆட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 154 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் கோஸ்வாமி 42 பந்துகளில் (7பவுண்டரிகள் ஒரு சிக்சர் உட்பட) 52 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் மிஸ்பா உல் ஹக் 25 பந்துகளில் (2பவுண்டரிகள் 4 சிக்சர்கள் உட்பட) 47 ஓட்டங்களையும் மற்றும் கலிஸ் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மகரூப் 4 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் மற்றும் மெக்ராத் 4 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 155 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி சேவாக், காம்பீரின் அதிரடியான ஆரம்ப துடுப்பாட்டத்தால் 18.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 158 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

இதில் சேவாக் 19 பந்துகளில் (9 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட) 47 ஓட்டங்களையும் காம்பீர 31 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 39 ஓட்டங்களையும் மற்றும் டிவில்லியர்ஸ் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணில் கும்ளே 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் நாயகனாக கோஸ்வாமி தெரிவானார்.

(5)

## பந்து வீச்சில் ஆர்.பி.சிங்

ஐ.பி.எல் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிவரை பந்து வீச்சில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியோர் வரிசையில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் ஆர்.பி.சிங் 15 விக்கெட்டுக்களை வீழ்த்தி முதலாவது இடத்திலும்; அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய முதல் 5 வீரர்கள் வருமாறு,

| வீரர்கள் | போட்டிகள் | வீசிய ஓவர் | வழங்கிய ஓட்டம் | வீழ்த்திய விக். | சராசரி | அதிக பெறு. |
|---|---|---|---|---|---|---|
| ஆர்.பி.சிங் (டெக்கான் சார்ஜர்ஸ்) | 11 | 40.5 | 358 | 15 | 23.86 | 3/35 |
| ஷேன் வோர்ன் (ராஜஸ்தான் றோயல்ஸ்) | 10 | 33 | 263 | 14 | 18.86 | 3/19 |
| இர்பான் பதான் (கிங்ஸ் லெவின் பஞ்சாப்) | 10 | 37.2 | 243 | 13 | 18.69 | 2/18 |
| சிறிசாந் (கிங்ஸ் லெவின் பஞ்சாப்) | 10 | 35.1 | 294 | 13 | 22.61 | 3/29 |
| சகீர்கான் (பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ்) | 11 | 42 | 357 | 13 | 27.46 | 3/38 |

## சிக்ஸர் நாயகன் ஜெயசூர்யா

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி வரை அதிக சிக்ஸர்கள் விளா சிய வீரர்கள் வரிசையில் ஜெயசூர்யா 20 சிக்ஸர்களுடன் முதலிடத்தில் உள்ளார். எனினும் அவருடன் சமனாக உள்ள வீரேந்திர சேவாக் கூடுதலாக ஒரு போட்டியில் விளையாடியுள்ளார்.

அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர்கள் வருமாறு,

| வீரர்கள் | போட்டிகள் | இன்னிங்ஸ் | ஓட்டங்கள் | அதிக பட்ச ஓட்டம் | பவுண்டரிகள் | சிக்ஸர்கள் |
|---|---|---|---|---|---|---|
| சனத் ஜெயசூர்யா (மும்பை இந்தியன்ஸ்) | 10 | 10 | 336 | 114☆ | 42 | 20 |
| வீரேந்திர சேவாக் (டில்லி டேர் டேவில்ஸ்) | 12 | 12 | 385 | 94 | 43 | 20 |
| டேவிட் ஹசி (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்) | 11 | 11 | 296 | 71 | 15 | 17 |
| அடம் கில்கிறிஸ்ட் (டெக்கான் சார்ஜர்ஸ்) | 11 | 11 | 335 | 109☆ | 33 | 15 |
| மக்கலம் (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்) | 4 | 4 | 188 | 158☆ | 13 | 15 |

## காம்பீர் முதலிடம்

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி வரை துடுப்பாட்ட வீரர்கள் எடுத்த ஓட்டங்களின் அடிப்படையில் டில்லி டேர் டேவில்ஸ் அணி வீரர் காம்பீர் முதலிடத்தில் உள்ளார்.

| வீரர் | போட்டிகள் | இன்னிங்ஸ் | ஆட்டமிழப்பில்லை | ஓட்டங்கள் | அதிகூடிய ஓட்டம் | 100 | 50 | ஓட்ட சராசரி |
|---|---|---|---|---|---|---|---|---|
| கௌதம் காம்பீர் (டில்லி டேர் டேவில்ஸ்) | 12 | 12 | 1 | 504 | 86 | - | 5 | 45.81 |
| வீரேந்திர சேவாக் (டில்லி டேர் டேவில்ஸ்) | 12 | 12 | 2 | 385 | 94☆ | - | 3 | 38.50 |
| ரோகித் சர்மா (டெக்கான் சார்ஜர்ஸ்) | 11 | 10 | 1 | 337 | 76☆ | - | 3 | 37.44 |
| சனத் ஜெயசூர்யா (மும்பை இந்தியன்ஸ்) | 10 | 10 | 2 | 336 | 114☆ | 1 | - | 42.00 |
| அடம் கில்கிறிஸ்ட் (டெக்கான் சார்ஜர்ஸ்) | 11 | 11 | 1 | 335 | 109☆ | 1 | 2 | 33.50 |

## ஐ.சி.சி பாதுகாப்புகுழு பாகிஸ்தான் வருகை

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள ஐ.சி.சி சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிட ஐ.சி.சி பாதுகாப்புக்குழு பாகிஸ்தான் வந்துள்ளது.

ஜேம்ஸ் விங்ஸ்டன், கீன் ஸ்டைன் என்ற இரண்டு பிரித்தானிய பாதுகாப்பு நிபுணர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பாகிஸ்தான் வந்துள்ளனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த அறிக்கையை ஐ.சி.சி விரைவில் வெளியிடும் என இருவரும் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

கராச்சியில் நடைபெறும் போட்டிகளுக்கான மைதானங்களை இவர்கள் பார்வையிடுவார்கள். பின்னர் பாகிஸ்தான் அரசு மற்றும் பாதுகாப்புத்துறையின் மூத்த அதிகாரிகளுடன் இந்தக்குழு விவாதிக்கவுள்ளது.

ஐ.சி.சி உயர்மட்ட செயற்குழு, உறுப்பு நாட்டுச் சபை அதிகாரிகள் மற்றும் ஐ.சி.சி செயற்குழு ஆகியவை இது குறித்த அறிக்கையை வெளியிடும்.

(5)

## பெடரரை வீழ்த்தினார் நடால்

(ஜேர்மனி)

உலகின் முதல் நிலை வீரர் றொஜர் பெடரரை இரண்டாம் நிலை வீரர் ரபீல் நடால், ஹம்பர்க் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் வீழ்த்தினார்.

கடந்த சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஸ்பெயின் வீரர் நடால் 7:5, 6:7, 6:3 என்ற செட் கணக்கில் பெடரரை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார். இந்த போட்டி களிமண் தரையில் நடைபெற்றமை நடாலுக்கு சாதகமாக அமைந்தது.

இதன் மூலம் களிமண் தரையில் நடைபெறும் மூன்று (ரோம், மொன்டோ கார்லோ மற்றும் ஹம்பர்க்) மாஸ்டர்ஸ் கிண்ண போட்டிகளிலும் சம்பியன் பட்டம் வென்ற மூன்றாவது டென்னிஸ் வீரராக நடால் சாதனை படைத்தார்.

அத்துடன் நடால் இதுவரை பெற்ற 26 சம்பியன் பட்டங்களிலும் 21 பட்டங்கள் களிமண் தரை போட்டிகளில் வென்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் கிராண்ட்ஸ்லாம் போட்டியான மூன்று பிரெஞ் ஓபன் பட்டங்களும் உள்ளடங்கும்.



மறுபுறத்தில் சுவிட்ஸர்லாந்தின் றொஜர் பெடரர் 4-வது முறையாகவும் ஹம்பர்க் மாஸ்டர்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றும் எதிர்பார்ப்பு இம்முறை கைநழுவிப் போனது.

கடந்த ஆண்டு இறுதிப் போட்டியில் பெடரர், நடாலை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பெடரர் இந்த ஆண்டில் தோல்வியைச் சந்திக்கும் 7-வது போட்டி இதுவாகும். அவர் இந்த ஆண்டில் போர்த்துக்கல்லில் நடைபெற்ற டென்னிஸ் தொடர் ஒன்றில் மாத்திரமே சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

(5)

## டில்லியா? மும்பையா? அரையிறுதிக்கு

அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய டில்லி டேர் டேவில்ஸ் அணி 6 வெற்றியுடன் அரையிறுதி வாய்ப்பை அதிகரித்து கொண்டது. பெங்களூர் அணி இத் தொடரில் 9-வது தோல்வியை சந்தித்தது.

இதன் மூலம் அரையிறுதி வாய்ப்பை ஏற்கனவே இழந்தது. ஒவ்வொரு அணியும் பெற்றுள்ள புள்ளி விபரம்:

| அணி | தலைவர் | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி | ஓட்ட விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| ராஜஸ்தான் | வோர்ன் | 10 | 8 | 2 | 16 | + 0.876 |
| பஞ்சாப் | யுவராஜ் | 10 | 7 | 3 | 14 | + 0.475 |
| சென்னை | தோனி | 11 | 7 | 4 | 14 | – 0.175 |
| மும்பை | டெண்டுல்கர் | 10 | 6 | 4 | 12 | + 0.727 |
| டில்லி | சேவாக் | 12 | 6 | 6 | 12 | + 0.350 |
| கொல்கத்தா | கங்குலி | 11 | 5 | 6 | 10 | – 0.026 |
| டெக்கான் | லக்ஸ்மன் | 11 | 2 | 9 | 04 | – 0.463 |
| பெங்களூர் | ராவிட் | 11 | 2 | 9 | 04 | – 1.517 |

குறிப்பு:- டில்லி- பெங்களூர் அணிகள் மோதிய போட்டிவரை.

# இன்று ஒரு தகவல்

## அன்பின் வலிமை

ஒரு ராஜா வித்தியாசமான பொழுதுபோக்கை கைக் கொண்டிருந்தார். தன்னை சுற்றியிருப்பவர்களிடம் ஏடா கூடமாக ஏதாவது கேள்வியைக் கேட்பார்.

அவர்கள் பதில் சொல்லத் தெரியாமல் முழிக்கும் போது அதைப் பார்த்து ரசிப்பார். இப்படி ஒரு சுபாவம் அவருக்கு !

ஒருநாள் அவருடைய மந்திரி அவரிடம் மாட்டினார். அவரைக் கூப்பிட்டு, "அமைச்சரே... எனக்கு ஒரு சந்தேகம்!" என்றார்.

"என்ன?" என்றார் அமைச்சர். "கடவுள் இருக்கிறாரா!" என்றார் அவர். "ஆமாம்! இருக்கிறார் !" என்றார் அவர் . "அவர் என்ன சர்வவல்லமை படைத்தவரா?" என்றார்.

"ஆமாம் அரசே! அவனின்றி ஓர் அணுவும் அசையாது! இருந்த இடத்திலிருந்தே கண்சிமிட்டும் நேரத்தில் ஏராளமான அற்புதங்களை நிகழ்த்த, அவனன்றி யாரால் முடியும்?" என்றார் அமைச்சர்.

"இந்த இடத்தில் தான் எனக்கு இன்னொரு சந்தேகம்! அதாவது நீங்கள் சொல்வது போல் சர்வவல்லமை படைத்தவராகவும் இருந்த இடத்திலிருந்து ஏராளமான அற்புதங்களை செய்யக் கூடியவராகவும் இருந்தால் அவர் இருந்த இடத்திலிருந்தே ஒருவனுடைய கஷ்டத்தை தீர்த்து வைக்கலாமே... மஜிக் செய்வது மாதிரி! அதைவிட்டுட்டு, பக்தன் கூப்பிட்டா ஒரு வாகனத்தின் மீது ஏறி ஏன் இங்கே ஓடி வரவேண்டும். இப்படி வருவதாகத் தான் புராணம் கூறுகிறதே! அவருக்கு இருக்கும் சக்திக்கு அவர் இருக்குமிடத்திலிருந்தே ஒரு விரலை அசைத்தால்... இங்கே பக்தனுக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்காதா?" என்று கேட்டார் ராஜா.

அமைச்சர் யோசித்துவிட்டு இதே கேள்விக்கான பதிலை சமயம் வரும்போது உங்களுக்குச் சொல்கிறேன் என்று சொல்லி அவரிடமிருந்து தப்பினார்.

கொஞ்சநாட்கள் கழித்து, ராஜா உல்லாசப் பிரயாணம் புறப்பட்டார். அவருடைய குடும்பத்தினர், உறவினர்கள் எல்லோரும் சேர்ந்தே போனார்கள்.

ஒரு பெரிய படகில் ஏறி ஒரு நதியைக் கடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

அந்தப் படகின் முனையில் ராஜா உட்கார்ந்து நதியின் அழகை ரசித்துக் கொண்டிருந்தார். இன்னொரு முனையில் அமைச்சர் இளவரசனுக்கு ஏதோ வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தார். நடு ஆற்றில் போய்க்கொண்டிருந்த போது "தொப்" என்று ஒரு பெரிய சத்தம் கேட்டது!

"அரசே! நம்முடைய இளவரசன் ஆற்றில் விழுந்துவிட்டார்!" என்று அலறினார் அமைச்சர். அவ்வளவுதான். உடனே ராஜா ஆற்றில் பாய்ந்து மகனைத் தேட ஆரம்பித்தார். அங்கேயும் இங்கேயும் அல்லாடினார். மகனைக் காணவில்லை! அதன்பின் மந்திரியும் ஆற்றிலே குதித்து ராஜாவிடம் வந்தார்.

"அரசே! இளவரசர் படகில் பத்திரமாக இருக்கிறார். தண்ணீரில் விழுந்தது வெறும் "கல் தான்!" என்றார். இருவரும் ஈர உடையுடன் படகுக்கு வந்துசேர்ந்தார்கள். ராஜாவுக்கோ மந்திரி மேல் கோபம். "இது என்ன விளையாட்டு?" என்றார்.

"அரசே! கொஞ்ச நாளைக்கு முன் நீங்கள் கேட்ட கேள்விக்குரிய பதிலை அனுபவரீதியாக உணரவேண்டும் என்பதற்காகவே இப்படி செய்தேன் என்றார் அமைச்சர். அதற்கு விளக்கமும் கொடுத்தார்.

"அரசே! ஒரு பக்தனுக்கு கஷ்டம் என்றால் இருந்த இடத்தில் இருந்தே அதை தீர்த்து வைக்காமல் கடவுளே ஏன் நேரில் ஓடி வரவேண்டும்? என்று கேட்டீர்கள்.

இப்பொழுது என்ன நடந்தது? இளவரசர் ஆற்றில் விழுந்துவிட்டார் என்றதும் நீங்க "ம்" என்று சொல்லி ஒரு விரல் காட்டினாலே போதும் ஏராளமான காவலர்கள் இங்கு இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்? உடனே ஆற்றில் குதித்தீர்கள்! அப்படி உங்களை குதிக்க வைத்தது எது?

மகன் மேலுள்ள பாசம் ! அன்பு! அது மாதிரி தான் கடவுளும் ஓடிவருகிறார்!" என்றார்.

அதற்குப் பிறகு, ராஜா ஏடாகூடமாக கேள்வி கேட்டதையே நிறுத்திவிட்டார்.

இந்தக் கதையின் கருத்து என்னவென்றால் "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் " என்பதுதான் அன்பு வலிமையானது என்பதைப் புரிந்துகொண்டால் போதும். அன்றைக்கு ஒருத்தன் கையில் ஒரு கல்யாணப் பத்திரிகை வைத்திருந்தான்.

" சார்... இந்தக் கல்யாணம் கொல்கத்தாவில் நடக்குது... ரொம்பத் தூரம் தான்! இருந்தாலும் நான் நேரில் போய் கலந்து கொள்ளப் போகிறேன்" என்றான்.

"மாப்பிள்ளை அவ்வளவு நெருக்கமானவரா?" என்றேன்.

" இல்லை சார்! மாப்பிள்ளையே நான்தான்!" என்கிறான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கையில் எயார்டெல் நிறுவனத்தின் சேவை இவ் வருடம் ஆனிமாதத்தின் பின் ஆரம்பமாகும்

(கொழும்பு)

இலங்கையில்கையடக்கத்தொலை பேசி சேவையினை வழங்கவுள்ள 5ஆவது நிறுவனமான இந்தியாவின் எயார்டெல் 2008 இன் மூன்றாம் காலாண்டில் தனது சேவையை ஆரம்பிக்கத்திட்டமிட்டுள்ளதாக எயார்டெல் நிறுவனத்தின் இலங்கைக்கான நிறைவேற்று அதிகாரி அமாலி நாணயக்கார தெரிவித்துள்ளார்.

2007ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இதற்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றதாகத் தெரிவித்திருக்கும் அவர் தமது சேவையை இலங்கையில் ஆரம்பிப்பதற்கும் அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்கியுள்ளதாகவும் உலகத் தரம் வாய்ந்த கையடக்கத் தொலைபேசி சேவையினை வழங்குவதே தமது நிறுவனத்தின் கொள்கை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தொலைத்தொடர்புக் கோபுரங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை ஏனைய நிறுவனங்களுடன் பங்கிட்டுக் கொள்வதே சூழல் சனத்தொகை மற்றும் தொழிற் சந்தைக்கு சிறந்ததும்எனக்குறிப்பிட்டுள்ளஅமாலி நாணயக்கார. ஆனால் இந்தப் பங்கிடும் முறையானது இலங்கை க்கு புதியது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவில் தொலைத்தொடர்புக் கோபுரங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை பங்கிட்டுக் கொள்ளும் பொறிமுறை வளர்ச்சியடைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் கையடக்கத் தொலைபேசி சந்தை பெரும் வளர்ச்சி அடைந்து வருவதாகவும் அதில் தாம் தலா 38 வீதம் உள் நுழைந்துள்ளதாகவும் குறிப்பிட்ட அவர் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கையடக்கத் தொலைபேசி சந்தையில் 50 வீதம் உள்நுழைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இலங்கையின் தொலைத் தொடர்புச் சந்தையில் மலேசியாவின் மெக்சிஸ் நிறுவனம்பிரவேசித் திருப்பதை வரவேற்றிருக்கும் அவர் இது சந்தையின் போட்டித் தன்மையை மேலும்அதிகரிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ஓ-5)

# கிராம எழுச்சித் திட்டத்தின் மூலம் 14 ஆயிரம் கிராமங்கள் அபிவிருத்தி

கிராம எழுச்சித் திட்டம் மூலம் 14 ஆயிரம் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு அனைத்து அமைச்சுக்களும் உள்ளடக்கப்படும் வகையில், 38 ஆயிரம் மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவிக்கின்றது.

அத்துடன் நாட்டின் பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக 3 ஆயிரம் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுசமுர்த்திக் கிராமங்களாக முழுமையான அபிவிருத்திக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இதற்கமைய சகல சமுர்த்தி வங்கி வலயம் ஊடாகவும் 3 கிராமங்கள் தெரிவுசெய்யப்படும். அதேவேளை, அந்தக்கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தேசநிர்மாண அமைச்சு ஆகியன நடவடிக்கை எடுத்துள்ளன.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த சமுர்த்திப் பயனாளிகளினதும், குறைந்த வருமானம் பெறுபவர்களினதும் வாழ்வாதார அபிவிருத்தி திட்டமொன்றையும் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபை முன்னெடுக்கவுள்ளது. கிராமங் களின் விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி கைத்தொழில் மற்றும் விற்பனை நடவடிக்கை களை ஊக்குவிப்பதற்கும் இந்தத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஓ-5)

# வழங்கப்படும் நிவாரணத்தை அதிகரிக்குமாறு இலங்கை அகதிகள் இந்திய அரசிடம் கோரிக்கை

தமக்கு வழங்கப்படும் நிவாரணங்களை அதிகரிக்குமாறு தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அரிசி, சீனி, மா, மண்ணெண்ணெய் ஆகிய அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்வதனால் தமக்குக் கிடைக்கும் நிவாரணங்கள் போதுமானதாக இல்லை என அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

தமிழகத்திலுள்ள சுமார் 65 ஆயிரம் இலங்கை அகதிகள் 113 அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். அகதிக் குடும்பத்தின் தலைவருக்கு மாதாந்தம் இந்திய ரூபாவில் 400 ரூபாவும் குடும்பத்தின் ஏனையவர் களுக்கு தலா 228 ரூபாவும் 12 வயதுப் பிள்ளைக்கு 180 ரூபாவும் 12வயதுக்குகுறைந்த பிள்ளைகளுக்கு தலா 90 ரூபாவும் அடிப்படை நிவாரணமாக வழங்கப்படுகின்றன. எனினும் கடந்த காலங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்திருப்பதால் இலங்கை அகதிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருக்கின்றார்கள். இந்த நிலையில் இவர்கள் தமது உணவுக்காக தங்களது தங்க ஆபரணங்களையும் ஈடுவைக்கும் நிலை ஏற்பட்டிருப்ப தாக '' த ஹிந்து '' நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது. எனவே தமக்கு வழங்கப்படும் நிவாரணத்தை அதிகரிக்குமாறு இந்திய அரசாங்கத்திடம் இலங்கை அகதிகள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். (ஓ-6)

## இராசிபலன்

21.05.2008

(வைகாசி 08, புதன்கிழமை)

அனுஷம் காலை 6.15 மணிவரை

பிரதமை முற்பகல் 09.55 மணிவரை

இராகுகாலம் 11.52- 01.22மணிவரை

சுபநேரம்-04.22-05.52 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | உடல் நலக்குறைவு, எதிர்பாராத அச்சம், போசனசுகம். |
| இடபம் | குடும்பசுகம், தெய்வசிந்தை, கீர்த்தி, காரிய அனுகூலம். |
| மிதுனம் | பணவருவாய், திடீர் பயணம், சத்துருஜெயம்,முயற்சி கைகூடும். |
| கடகம் | காரிய இடையூறு, கௌரவக் குறைவு, உடல்நலக்குறைவு, புத்திரரால் கவலை. |
| சிங்கம் | தன்னம்பிக்கைக் குறைவு, சுப செலவு, திடீர் நன்மை, ரோகநிலை. |
| கன்னி | சகோதரர் வழி நன்மை, மனோ தைரியம், இஷ்டசித்தி, தனவருவாய். |
| துலாம் | சங்கடமான நிலை, விவாதம், அதிகசெலவு, உஷ்ணநிலை. |
| விருச்சிகம் | வெகுமானம், போசனசுகம், புதிய முயற்சி, தெய்வசிந்தை. |
| தனுசு | அமைதிக்குறைவு, திடீர் பயணம், சயன சுகக் குறைவு, முயற்சி தாமதம். |
| மகரம் | தனதானிய சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, சயனசுகம், முயற்சி கைகூடும். |
| கும்பம் | அதிகாரம், எடுத்தகாரியம் கைகூடும், பிறர்உதவி, புதிய திருப்பம். |
| மீனம் | ஆன்றோர் சந்திப்பு, உடல் உழைப்பு, புதிய திட்டமிடல், வீண்பயம். |

வளவன்

# இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்புக் கோரும் இந்திய தமிழ் அமைப்புக்கள் கூட்டமைப்பு

இலங்கை தமிழரைப் பாதுகாக்க மத்திய அரசை வலியுறுத்தி அனைத்து தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பினர் திங்கட்கிழமை பட்டினிப் போராட்டம் நடத்தினர். சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை முன்பு இந்தப் போ ராட்டம் நடைபெற்றது.

இலங்கையில் அமைதியை ஏற்படுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தீர்மானத்தை தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றியுள்ளனர்.

இலங்கையில் முறையான தொரு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும். தமிழர்களுக்கு உரிமைகளைப் பெற்றுத்தர மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அனைத்துக் கட்சியினரும் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். மத்திய அரசு இந்தத் தீர்மானத்தை செயல்படுத்த வேண்டும் என போராட்டத்தில் வலியுறுத் தப்பட்டது.


போராட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் கோ.க.மணி தொடங்கி வைத்தார். திராவிட இயக்கத் தமிழர் பேர வையின் பொதுச்செயலாளர் சுப. வீரபாண்டியன் தலைமை வகித்தார். (ஓ-5)



வல்வெட்டித்துறை நகரசபையில் நடைபெற்ற புத்தக தின கண்காட்சியை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. மயிலேறும்பெருமாள் திறந்துவைப்பதையும், நகரசபைச் செயலாளர் கே.அமிர்தலிங்கம், வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.கிருஸ்ணானந்தன், வடமராட்சி வலயக் கல்வி அபிவிருத்திக் கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படம்:-பரு.நிருபர்)

# ஹஸ்க் நிறுவன உதவியுடன் 4தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு கட்டடங்கள் அமைக்கப்படும்



(யாழ்ப்பாணம்)

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை (ஹஸ்க்) நிறுவனத்தின் உதவியுடன் யாழ்.மாவட்டத்தில் 4 தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டப்படவுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இப் பயிற்சி நிலையங்கள் சண்டிலிப்பாய், சாவகச்சேரி, கரவெட்டி மற்றும் உடுவில் பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைக்கப்படவுள்ளது.

இதில் சண்டிலிப்பாய், கரவெட்டி மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதுடன் உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் அமைக்கப்படவுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் விஷேட தகமையுடையவர்கள் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாமெனவும் யாழ். அரச அதிபர் குறிப்பிட்டார்.

அத்துடன் விரைவில் தீவக இளைஞர், யுவதிகள் பயன்பெறக் கூடிய வகையில் சேவையைப் பிரதேச செயலகப் பிரிவிலும் கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை (ஹஸ்க்) நிறுவனத்தின் உதவியுடன் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். (5-3)

## புதிதாக மின்சார விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் புதிதாக ஏழு வீதிகளுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ் வீதிகளுக்கு மின்சார விநியோகம் செய்வதற்கான மதிப்பீடுகள் நிகோட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு அனுமதிக்காக தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அனுமதி கிடைக்கப் பெற்றதும் வீதிகளுக்கான மின்சார விநியோக வேலைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## ஸ்ரீ அம்மா பகவான் பாதபூஜை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் அம்மா பகவான் சங்கத்தினர் இந்தியாவில் ஸ்ரீஅம்மா பகவான் ஆலயத் திறப்பு விழாவில் கலந்து திரும்பியுள்ளார்கள். இவ் ஆனந்தத்தை பக்தர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை பகல் 10மணி முதல் பாத பூஜை நிகழ்வு இடம்பெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## சங்கானை மக்கள் வங்கியில் கணனி வலைப்பின்னல் சேவை

(யாழ்ப்பாணம்)

சங்கானை மக்கள் வங்கிக் கிளை இன்று புதன்கிழமை முதல் கணனி வலைப்பின்னல் சேவையை வாடிக்கையாளர்களுக்கு வழங்கவுள்ளது.

சங்கானைக் கிளை முகாமையாளர் ந.துரைராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ் ஆரம்ப விழாவில் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சேவையை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஓ)

## வாரத்தில் முழுநாளும் செயற்படும் கால்நடை வைத்திய உபநிலையம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி கால்நடை வைத்திய உப நிலையம் வாரத்தின் முழு நாளும் செயற்படும்.

கால்நடைகளுக்கான செயற்கை முறைச் சினைப்படுத்தல் உள்ளிட்ட அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம் என்று கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி சகுந்தலா மகேந்திரராசா அறிவித்துள்ளார்.

அச்சுவேலி கால்நடைவைத்திய உபநிலையத்தின் செயற்பாடுகள் தொடர்பாக வைத்திய அதிகாரி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

- கால்நடைகளுக்கான தடுப்பூசி ஏற்றல்.
- கோழிகளுக்கான தடுப்பு மருந்துகள் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காலை 8 மணிக்கு வழங்கப்படும்.
- ஆடுகளுக்கு ஏற்பூசி ஏற்றல்.
- நாய்களுக்கான விசர் நோய் தடுப்பு ஊசி ஏற்றல்.
- பெண் நாய்களுக்கு கர்ப்பத் தடை மருந்து ஏற்றல்.
- செயற்கை முறைச் சினைப்படுத்தல் ஆடு, மாடுகளுக்கு செயற்கை முறைச்சினைப் படுத்தல் பதிவுகள் காலை 10மணிக்கு முன்னர் பதிவு செய்யப்பட வேண்டும்.
- புதன்கிழமைகளில் கால்நடை வைத்திய அதிகாரி கடமையில் இருப்பார்.
- விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் கால்நடை உற்பத்தி சுகாதார போதனாசிரியர்கள் கடமையில் இருப்பார்கள்.

வலி.கிழக்கு வடக்கு பகுதியை சேர்ந்த பண்ணையாளர்கள் கால்நடை வளர்ப்போர் அச்சுவேலி, ஆவரங்கால் பிரதான வீதி (அச்சுவேலி தெற்கு பிரப்பன்தான் குளத்தடி) யில் உள்ள கால்நடை வைத்திய உப நிலையத்தில் தமக்குரிய சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)

## கரப்பந்தாட்டப் போட்டி மாவட்ட மட்ட சம்பியன்கள்

(நல்லூர்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதிற்குட்பட்ட பிரிவில் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயமும் 17 வயதிற்குட்பட்ட பிரிவில் அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயமும், 19வயதிற்குட்பட்ட பிரிவில் புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லூரியும் யாழ்.மாவட்ட சம்பியன்களாகியுள்ளன. இப் போட்டியில் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற பாடசாலை அணிகளின் விபரம் வருமாறு,

15 வயதிற்குட்பட்ட கீழ்ப்பிரிவு இரண்டாம் இடம் புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லூரி, மூன்றாம் இடம் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்.17 வயதிற்குட்பட்ட கீழ்ப் பிரிவு,

இரண்டாம் இடம் மானிப்பாய் இந்துக் கல்லூரி, மூன்றாம் இடம் புத்தூர் ஸ்ரீ சோமாஸ் கந்தாக் கல்லூரி.

19 வயதிற்குட்பட்ட கீழ்ப்பிரிவு இரண்டாம் இடம் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மூன்றாம் இடம் அச்சுவேலி மத்திய கல்லூரி. (ஓ-5)

## நடைபாதையில் தொடரும் அங்காடி வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக உள்ள நடைபாதையில் நீண்டநாட்களாக அங்காடி வியாபாரத்தினால் பாதசாரிகளுக்கு தொந்தரவு என யாழ். மாநகரசபை சிலநடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களை அப்புறப்படுத்தியும் மீண்டும் அவர்கள் அவ் வியாபாரத்தைத் தொடர்ந்து நடாத்தி வருவதால் மிகுந்த சிரமத்தை அளித்து வருகின்றார்கள். (ஓ)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை நவோதய கல்விக் கண்காட்சியை வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம்.

## யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தின் 'தென்றல்' செய்திமடல்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்விசார் நிகழ்வுகள், செயற்பாடுகள், சாதனைகள் என்பவற்றை சமூகத்துக்கு வெளிப்படுத்தும் முயற்சியாக யாழ். வலயக் கல்வி அலுவலகத்தால் வெளியிடப்படும் தென்றல் செய்திமடலின் முதலாவது வெளியீடு வெளிவந்துள்ளது. (ஓ)

## கல்விசார் அபிவிருத்தி செயற்றிட்டம்

ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம், கல்விசார் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் கீழ்க்காணும் நிகழ்வுகளை நாளை வியாழக்கிழமை பி.ப1.15 மணி முதல் 2.30 மணிவரை வித்தியாலய அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடத்தவுள்ளது.

- E.S.D.F.P (2008) செயற்றிட்ட பயிற்சிப் புத்தக வெளியீடு,
- பாடசாலை மட்ட தமிழ் திறன் போட்டி பரிசளிப்பு,
- சுவர்ப்படங்கள் அங்குரார்ப்பணமும், ஓவியர் கௌரவிப்பும்,
- மாணவர் நலனோம்பு செயற்றிட்ட அங்குரார்ப்பணம்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.தமிழ்மாறன், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட, கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி, கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சிவராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)




## உடற்பயிற்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான உடற் பயிற்சிப் போட்டிகள், நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இப் போட்டியில் நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அணிகள் கலந்துகொள்ளவுள்ளன. (ஓ)

## அலுமினியம் பொருத்தும் பயிற்சி

(சண்டிலிப்பாய்)

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை (ஹஸ்க்) நிறுவனத்தின் நிதியுதவியுடன் யாழ்.தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் அலுமினியம் பொருத்தும் பயிற்சிநெறி நேற்று முன்தினம் சண்டிலிப்பாயில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆரம்ப வைபவத்தில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் கலந்துகொண்டு பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்தார்.

இப் பயிற்சி நெறியின் மூலம் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர்கள் பயன்பெற முடியுமென யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். (3, 4)

## அத்தியாவசிய பொருட்களை எடுத்துவர அனுமதி வழங்க வேண்டும்

### -பொதுமக்கள் கோரிக்கை

(வேலணை)

நெடுந்தீவு -குறிகட்டுவான் சேவையில் ஈடுபடும் குமுதினி அரச படகில் தடையையும் மீறி மதுபானங்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன என்று பயணிகள் முறையிடுகின்றனர். குமுதினிப் படகில் மதுபான வகைகள் எடுத்துச் செல்வதற்கு முற்றாகத்தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் இப் படகின் ஊடாக தினமும் மதுபான வகைகள் நெடுந்தீவுக்கு எடுத்து வரப்படுகின்றன எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேசமயம் தமது வீட்டுப் பாவனைக்கென பயணிகளால் எடுத்து வரப்படும் சிறிய அளவிலான அத்தியாவசிய பாவனைப் பொருட்களை படகில் எடுத்து வர அனுமதிக்கப்படவில்லை. எனவே வீதி அபிவிருத்திச் சபையின் அதிகாரிகள் மக்களின் அன்றாட பாவனைக்குரிய பொருட்களை எடுத்து வர உரிய அனுமதியை வழங்கவேண்டும் எனவும் மதுபானம் எடுத்து வருவது முழுமையாக தடைசெய்ய வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஓ-5)

# மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு மீண்டும் அங்கத்துவம் கிடைக்கும் என்கிறார்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரையின் ஆசிய நிலை ஆசனத்துக்குப் போட்டி



யிட இலங்கை தயாராக இருப்பதாக மனித உரிமைகள் சம்பந்தமான அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தெரிவை உறுதிப்படுத்திக் கொள்ளும் நம்பிக்கையுடன் தெரிவில் போட்டியிடுவதாகவும் அமைச்சர் கூறினார்.

மனித உரிமைகள் பேரவையில் கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை பாரிய பணிகளை முன்னெடுத்ததை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கையின் அறிக்கையை மனித உரிமைகள் பேரவை ஒரு மாதமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விடயம் இலங்கைக்கு சாதகமான அறிகுறிளை எடுத்துக்காட்டுகின்றது என அமைச்சர் குறிப்பிட்டார். மேலும் சமர்ப்பிக்கப்பட்ட சிபாரிசுகளில் சுமார் 50 சிபாரிசுகளை நடைமுறைப் படுத்த தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆசிய வலயத்தில் 4 ஆசனங்களுக் காக ஆறு நாடுகள் போட்டியிடுகின்றன. இதில் இலங்கைக்கு மீண்டும் அங்கத்துவம் கிடைக்குமென்ற நம்பிக்கை இருப்பதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டார்.

இதேவேளை வெளியுறவு அமைச்சர் றோகித போகொல்லாகம இலங்கையின் உறுப்புரிமைக்காக சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பை கோரியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மிகாட்டர் ஐ.நாவின் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு இலங்கை மீளவும் தெரிவு செய்யப்படுவதற்கு தனது எதிர்ப்பினை வெளியிட்டுள்ளார்.

இது இலங்கை ஐ.நா. மனித உரிமை ஆணைகுழுவிற்கு மீள தெரிவாகும் தீவிர முயற்சிக்கு கிடைத் துள்ள பாரிய பின்னடைவு என மனித உரிமை ஆர் வல வட்டாரங்களிலிருந்து தெரிய வரும் அதே வேளை, இதற்கான வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள் ளது.

ஆசிய நாடுகளிற்கான நான்கு ஆசனங்களிற்கும் ஜப்பான், தென் கொரியா, பஹ்றெய்ன் ஆகிய மூன்று நாடுகளும் தெரிவு செய்யப்படுவது ஏறக்குறைய நிச்சயமாகியுள்ள நிலையில் நாலாவது ஆசனத்திற்கு இலங்கை, பாகிஸ்தான் உட்பட்ட வேறு சில நாடுகளும் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

நிக்கொட் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தால் நடாத்தப்படும் சிறுவர் நலச் சேவையில் உள்ள அலுவலர்களுக்கான திறன் விருத்திப் பயிற்சிப்பட்டறை நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ)

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### கண்டங்கத்தரி

Botanical Name -Solanam xanthocarpam
Family- Solanaceae
English Name -Yellow-Berried night-shade
Singala Name -Katuwel batu

ஓராண்டு வளரக்கூடிய இக் கொடி சுமார் 100செ. மீ. தூரம் வரைக்கும் நன்கு அடர்த்தியாக தரையோடு ஒட்டிப்படரும்.(An annual prostrate herv) அழுத்த முள்ள கொடிகளில்



சுமார்6-12செ.மீ நீளமுள்ள 3-6 செ.மீ அகலமுள்ள தனி, ஒன்று விட்ட ,நீள்வட்ட (Oblong ) சமமான இரு விளிம்புகளற்ற(Unequal sided at base ) இலைகள் நெருக்கமானவையாகவும் இருக்கின்றன. இலையின் இரு புறங்களிலும் கொடி, காம்பு ஆகிய எல்லாவற்றிலும் சுமார் 1செ.மீ நீளமுள்ள பிரகாசமான மஞ்சள் நிற முட்கள் ஏராளமாக நிறைந்திருப்பதைக்காண லாம். பூக்கள் 5 பிரிவாக தெரியும். ஒரே இதழுடைய ஊதா நிறமானவை. கண்டக் கத்தரிக்காயை விட சிறிது பெரிதாகவுள்ள காயின் சாம்பல் நிறத் தோலில் பல பச்சை நிறக் கோடுகள் காணப்படும். விதைகள் அதிகமுள்ள மஞ்சள்நிறமுடைய பழங்களைக் கொண்டது. வருடம் முழுவதும் பூக்கக் கூடியது.

வெப்பமுள்ள இடங்களில் (தரிசு) பயிரிடப் படாத திடலில் தானாக வீதியோரங்களில் முளைத்து வளரும் எல்லா வகை மண்ணிலும் வளரும். மணல் கலப்புள்ள இடங்களில் அதிகமாகக்காணலாம். விதைகளைத்தூவி முளைத்து வந்த கன்றுகளை மீற்றருக்கு ஒன்றாக நட்டு வளர்க்கலாம். யாழ் .மாவட்டத்தில் வல்லிபுரக்கோவிலை அண்டிய பிரதேசத்தில் பெருமளவில் பரம்பல் அவதானிக்கப்பட்டது. இதை விட கைதடி, நாவற் குழி பிரதேசத்திலும் காணப்படுகிறது.

பயன்படும்பகுதிகள்: -இலை (leaves), பூ (flower) ,காய் (unripe fruit),பழம் ( fruit), விதை (seeds), வேர் (Root) மருத்துவச் செய்கைகள்: கோழையகற்றி (expectorant),சிறுநீர் பெருக்கி (diuretic), அகட்டுவாய் அகற்றி (carminative), விதை பெரும் கழிச்சலுண்டாக்கி (hydragogue), மருந்துச் சத்து: solasodine(alk aloid)

**மருத்துவப் பிரயோகங்கள்-**

1. காய், பழங்கள் சமைத்தும் வற்றல் போட்டும் உண்ணலாம் .

2. கண்டங் கத்தரி இலையைக் கொண்டு வந்து முட்களை நீக்கி விட்டு அம்மியில் வைத்து நைத்து சாறு எடுத்து 1 தேக்கரண்டி சாற்றை சுத்தமான துணியில் வடிகட்டி அதேயளவு தேன் சேர்த்து காலை மாலை 3நாட்கள் உட்கொள்ள இருமல் தீரும். அத்துடன் சிறுநீர் கழியும் போது ஏற்படும் எரிச்சல் நீங்கி சிறுநீரும் நன்கு கழியும்

3. கால்களில் ஏற்படும் பித்தவெடிப்பு குணமாக 10 கண்டங் கத்தரியிலைகளை எடுத்து அதை ஒரு சட்டியில் போட்டு அரை டம்ளர் அளவு தேங்காய் எண்ணெயை அதிலிட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சினால் இலை வெந்து கருகும். அந்த சமயம் இறக்கி எண்ணெய்யை வடிகட்டி ஒரு சீசாவில் விட்டு வைத்துக் கொள் ளவும் இரவு படுக்கமுன் கால்களிலுள்ள வெடிப்புகளின் மேல் தடவிவந்தால் வெடிப்புகள் ஆறி மறைய ஆரம்பிக்கும் ஆறும் வரை மருந்தைப் பூசலாம்.

4. இதன் முழுச் செடியையும் (சமூலம்) நிழலில் உலர்த்தி இடித்து அரித்து 1-2 கிராம் தேனுடன் காலை மாலை 7 நாட்கள் உட்கொள்ள இருமல் , கசம், ஆஸ்மா தீரும்.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன்**(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி.

5. இச்செடியை குடிநீர் செய்து 30-60மி. லீ காலை மாலை கொடுக்க இருமல் தீரும்.

6. இதன் பழத்தை குழைய வேக வைத்து கடைந்து வடிகட்டி எடுத்த அளவு 1பங்கிற்கும் சம அளவு எள் நெய் சேர்த்து காய்ச்சி கடுகு திரளும் பருவத்தில் வடித்து வெண்குட்டத்தின் மீது பூசிவர வெள்ளைப்புள்ளிகள் மறையும்.

7. இதன் விதைகளை எரித்து அதனின்றும் எழுகின்ற புகையைப் பிடிக்க பல்வலி தீரும்.

8. இதன்வேரை முறைப்படி குடிநீரிட்டு 30-60 மி.லீ அளவுதிப்பிலிச்சூரணம் 1கிராமும் சேர்த்து தேன் கலந்து கொடுக்க இருமல் நீர்க் கோவை தீரும்.

9. இதன் பூவை நெய்யுடன் சேர்த்து காய்ச்சி வெளி மூலத்திற்குப் பூசலாம்.

குறிப்பு:கண்டக்கத்தரியில் சுத்த வெண்ணிறப் பூக்களுள்ள ஓர் இனத்திற்கு கண்டன் கத்தரி என்று பெயர். இது அபூர் வமாகக் காணப்படுகிறது. இதன் இலை, வேர், பழங்களை யும் மேற்கண்டவாறு உபயோகிக்கலாம்.


# மங்கலகரமான திறப்பு விழா

# மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கி

NSB



**வாடிக்கையாளர் நன்மதிப்பின் சொத்து புதுப் பொலிவுடன்!**

தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய் கிளையானது 06.04.2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஐந்தாவது அகவையைப் பூர்த்தி செய்து இன்று அனைத்து வசதிகளும் கொண்ட புதிய கட்டடத் தொகுதியில் தனது சேவையினை இடம் மாற்றி ஆறாவது ஆண்டில் மக்கள் சேவையில் இணைந்து வீறு நடையுடன் காலடி எடுத்து வைக்கிறது என்ற செய்தி எம்மையெல்லாம் புளகாங்கிதம் அடையச் செய்கிறது.

குறுகிய கால சேவையில் எமது வங்கி மானிப்பாயில் தனது அகலக்காலினை விரித்து ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களை இணைத்து தனது தரத்தினை ' C ' தரத்திற்கு உயர்த்தி வாடிக்கையாளர் மனதில் நீங்காத இடம்பிடித்திருப்பதுடன் அவர்களின் அளப்பெரும் தேவையினையும் பூர்த்தி செய்துள்ளது.

இன்னும் பல தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அது திட சங்கற்பத்தினை இந் நாளில் பூண்டுள்ளது. மக்களுக்கான தேவையினை உணர்ந்து அடகு வசதிகள் மற்றும் கடன் வசதிகள், கவர்ச்சிகரமான வட்டிகளுடன் கூடிய பொற்கணக்குகள் , சிறந்த திட்டத்துடன் கூடிய 55 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான pension+ என்பவற்றை துரித கதியில் செய்து வருகின்றது. மற்றும் வெகு விரைவில் தன் னியக்க பணப்பரிமாற்ற சேவை ATM இணைக்கப்படவுள்ளது என்பதையும் அனைத்து வசதிகளுடனும் சேவையாற்றி வருகிறது என்பதையும் கூறிக்கொள்வதில் பெருமையடைகிறேன்.

புதுப்பொலிவுடன் ஆறாவது ஆண்டில் வெற்றி நடைபோடும் எமது வங்கியின் வளர்ச்சிக்கு மக்களின் அமோக ஆதரவுக் கரங்கள் தான் காரணம். இத்தகைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்தும் நீங்கள் அனைவரும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு வங்கி தனது பணிகளை தொடர்ந்து ஆற்றப் பிரார்த்திக்கின்றேன்.

ப.சச்சிதானந்தம்
முகாமையாளர், தேசிய வங்கி,
மானிப்பாய்.

அனுசரணை:- சுந்தர்சன்
இல.138, யாழ்.வீதி, மானிப்பாய்.

தேசிய சேமிப்பு வங்கி, மானிப்பாய்.

காலம்:-21.05.20008 புதன்கிழமை
நேரம் - காலை 9.00மணி
இடம் - 'சுந்தர்ஷன் கட்டடத் தொகுதி'
இல. 138 , மானிப்பாய்.

தலைவர்
திரு.ப.சச்சிதானந்தம் அவர்கள்
(முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, மானிப்பாய்)

பிரதமவிருந்தினர்
உயர்திரு. க. கணேஷ் அவர்கள்
(யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்)

சிறப்பு விருந்தினர்
திருமதி.ரூபினி வரதலிங்கம் அவர்கள்
(பிரதேச செயலர், வலி தென்மேற்கு, சண்டிலிப்பாய்)
திருமதி இராஜேஸ்வரி உதயகுமார் அவர்கள்
(கணக்காளர், பிரதேச செயலகம், வலி மேற்கு ,சங்கானை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**வாழ்த்துச் செய்தியும் ஆசியுரையும்**

எமது மானிப்பாய்க் கிளை கடந்த 5 வருட காலங்களில் பல வளர்ச்சிகளை காண்பதற்கு உறுதுணையாக இருந்த முகாமையாளர் ப.சச்சிதானந்தனும், ஊழியர்களும் பாராட்டுக்குரியவர்கள். எமது வங்கியின் தலைவர் உபாலி குணரட்ண. பொதுமுகாமையாளர் S.M.பியசிறி, உதவிப் பொது முகாமையாளர் திருமதி குசும் அமரதுங்க ஆகியோர் வடக்கு கிழக்கு கிளைகளின் முன்னேற்றத்திற்கு தேவையான உதவிகளை மனமுவந்து வழங்கி வருவதால் வங்கிக் கிளைகள் பல வளர்ச்சிகளை அடைய முடிகிறது.

இதன் விளைவாக வடக்கு கிழக்கு கிளைகள் யாவும் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளதுடன் யாழ். கிளைக்கும் பருத்தித்துறை கிளைக்கும் ATM வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இச்சேவை விரைவில் சுன்னாகக் கிளைக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது. விரைவில் வாடிக்கையாளரின் நன்மை கருதி அனுராதபுரத்தில் உள்ள பிராந்திய தபால் அலுவலகத்தின் கணனி மயப்படுத்தப்பட்ட ஒரு கிளையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவுள்ளோம். இவ் வருடத்தில் நெல்லியடி, அச்சுவேலி ஆகிய இடங்களில் கிளைகளை திறப்பதற்கும் நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம்.

150 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட எமது வங்கி 16 மில்லியன் வாடிக்கையாளர்களையும் 250 பில்லியன் வைப்புப்பணத்தையும் 4000ற்கும் மேற்பட்ட தபால் வலையமைப்புக்களையும் கொண்டு அரச உத்தரவாதத்துடன் தொடர்ச்சியாக 4 வருடங்கள் மிகச் சிறந்த வங்கிக்குரிய விருதான AAA குறியீட்டை பெற்றுள்ளது. அத்துடன் வாடிக்கையாளர் மத்தியில் மதிப்பைப் பெற்று அவர்களுக்கு சிறந்த சேவை ஆற்றிவருகின்றது. அத்துடன் வளர்ந்துவரும் மானிப்பாய் கிளையின் வாடிக்கையாளர்களுக்கு மேலும் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் பொருட்டே இப்புதிய இடத்திற்கு மாறியுள்ளோம்.

எமக்குப் பூரணமாக உதவி வரும் அரச அதிபர் க.கணேஷ் அவர்களுக்கும், சுந்தர்சன் கட்டட தொகுதி உரிமையாளர் சிவகுமார் அவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்வதுடன் இவ் வங்கியின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் முக்கியமாக எமது வாடிக்கையாளர் பெருமக்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

*நாட்டிற்கும் மக்களுக்கும் சமாதானமும் சாந்தியும் வாழ்வில் சிறப்பும் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.*

இ.ஈஸ்வரலிங்கம்- செயற்பாட்டு உதவிப் பொதுமுகாமையாளர்.
சி.சிவராஜா - வடக்கு கிழக்கு, வலய முகாமையாளர்.

முகாமையாளரும் .உத்தியோகத்தர்களும்.

(சி/1152)

# ராஜீவ் கொலை விசாரணையில் உதவி கோரிய 21 நாடுகளிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை

## சி.பி.ஐ. பேச்சாளர் தெரிவிப்பு

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவத்தில் வெளிநாடுகளின் தொடர்புள்ளதா என்பதை அறியும் பொருட்டு 27 நாடுகளுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு 21 நாடுகள் பதிலளிக்கவில்லை என்று இந்தியாவின் மத்திய புலனாய்வு பிரிவின் (சி.பி.ஐ) பேச்சாளர் ஜி.மொகாந்தி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டு 16 வருடங்களாகியும் கொலையின் உண்மையான சூத்திரதாரிகள், சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் ஆகிய விடயங்கள் தொடர்ந்தும் மர்மமாகவே உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொலைச் சம்பவத்தில் வெளிநாடுகளின் தொடர்புள்ளதா என்பதை அறிவதற்கு விசாரணைகளுக்கு உதவிகோரி 27 நாடுகளுக்கு சட்டபூர்வமான கடிதங்கள் அனுப்பப்பட்டன. ஆனால், ஆறு நாடுகளே அதற்கு பதில் அனுப்பியிருக்கின்றன.

ஏனைய நாடுகள் எந்தப்பதிலையும் அனுப்பவில்லை. அவை தமது நாட்டில் விசாரணைகளை மேற்கொண்டு ஒரு முடிபை கூறினால்தான் எமது நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்கலாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

1998ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட ஒன்பது பக்கங்களைக்கொண்ட ஜெயின் கமிசன் அறிக்கையின்படி, கொலைச் சதியை கண்டு பிடிப்பதற்கு மூன்று விடயங்களின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அதன் அடிப்படையிலேயே வெளிநாடுகளுக்கு இந்தக் கடிதங்கள்அனுப்பப்பட்டன.

அதேவேளை இலங்கை, கனடா, மலேசியா, அவுஸ்திரேலியா எனப் பல நாடுகளுக்கு விசாரணையாளர்கள் அனுப்பப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், உண்மை இன்னும் இருட்டில்தான் கிடக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## அதிரடிப்படை முகாம் மீது அம்பாறையில் தாக்குதல்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் ரூபஸ்குளத்தில் உள்ள சிறப்பு அதிரடிப்படையின் முகாம் நேற்றுக்காலை தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியதில் அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதனை பாதுகாப்பு அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். இதனையடுத்து அப்பகுதியில் பாரிய சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-5)


## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து புத்தலவில் மீண்டும் பதற்றம்

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டம் புத்தலவில் நேற்று முன்தினம் இரவு அடையாளம் தெரியாதோர் நடத்திய தாக்குதலில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். 2 பொலிஸார் படுகாயமடைந்துள்ளனர்.

38ஆம் கட்டையிலுள்ள பொலிஸ் காவலரணில் எல்லைக்கிராம பாதுகாப்பு ப்ணியில் ஈடுபட்டிருந்தபோதே திங்கட்கிழமை இரவு 10.30 மணியளவில் இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக புத்தலப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து புத்தல மக்களிடையே மீண்டும் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது. சம்பவ இடத்தை அண்மித்துள்ள பகுதிகளில் படையினரும் ஊர்காவல் படையினரும் இணைந்து சிறப்பு தேடுதல் நடவடிக்கையினை நேற்றுக் காலை ஆரம்பித்துள்ளனர். (ச-5)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் முன்னாள் வலைபந்தாட்ட பயிற்றுநருமான மேரி எலியாஸின் ஞாபகார்த்தமாக சங்கானை கல்விக்கோட்டத்தில் முதன் முறையாக நடத்தப்பட்ட 13 வயதுக்குட்பட்டோருக்கான வலைபந்தாட்ட போட்டியில் வீராங்கனைகள் அணிவகுத்து நிற்பதனையும், கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் உரையாற்றுவதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட வலைபந்தாட்ட பயிற்றுநர் திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணித்தலைவிக்கு கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- கோபி)

## ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவில்...

மற்றும் ஆசியப் பிராந்தியங்களுக்கு தலா 13 ஆசனங்களும் கிழக்கு ஐரோப்பாவுக்கு 6 ஆசனங்களும் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு 8 ஆசனங்களும் மேற்கு ஐரோப்பியநாடுகளுக்கு 7 ஆசனங்களுமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இத்தேர்தலில் ஒரு தடவை போட்டியிட்டு வெற்றி பெற்றால் அந்நாடு இரண்டு வருடங்களுக்கு பதவியில் இருக்கலாம். தனது பதவிக்காலத்தை அந்நாடு நீடிக்க விரும்பினால் மீண்டும் தேர்தலில் நின்று வெற்றிபெற வேண்டும்.

47 உறுப்பினர்களுக்கான இத் தேர்தல் 192 பேர் கொண்ட ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நடைபெறும். சாதாரண பெரும்பான்மையின் அடிப்படையிலேயே வெற்றி வாய்ப்பு தீர்மானிக்கப்படும். அந்த வகையில் பொதுச்சபையில் இருந்து 97 வாக்குகள் பெற்றால் வெற்றி வாய்ப்பு உறுதி செய்யப் படும்.

**இலங்கையின் நிலைமை**

2006ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று மனித உரிமைகள் சபையில் உள்ள இலங்கையின் பதவிக்காலம் முடிபடைவதால் அது தனது இருப்பை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டு தேர்தலில் குதித்துள்ளது.

ஆனால் ஆட்கள் காணாமல் போதல், தொண்டு நிறுவனப் பணியாளர்கள் படுகொலைகள், ஊடகவியலாளர்கள் படுகொலைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் உட்பட பாரதூரமான மனித உரிமைகள் மீறல் சம்பவங்களில் ஈடுபட்டு வரும் இலங்கை ஐ.நா மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்க அனுமதிக்கக்கூடாது. அதில் அங்கம் வகிக்க இலங்கைக்கு எந்தத் தகுதியும் கிடையாது.

மனித உரிமைகளை பேணும் முன்னுதாரண நாடுகளே இச்சபையில் அங்கம் வகிக்க வேண்டும் என இலங்கையைச் சேர்ந்த 13 அரசசார்பற்ற அமைப்புக்கள் கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி ஐ.நா பொதுச் சபைக்கு மனுவினை அனுப்பியிருந்தன.

அதனைத் தொடர்ந்து நோபல் பரிசு பெற்றவர்களான அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர், ஆர்ஜன் டீனாவைச் சேர்ந்த அடல்போ பெரிஸ் மற்றும் தென்னாபிரிக்காவை சேர்ந்த டெஸ்மன்ட் டுட்டு ஆகியோரும் இலங்கை மனித உரிமைகள் சபையில் அங்கம்வகிக்கக் கூடாதென்று கடுமையான அறிக்கைகளை விடுத்திருந்தனர்.

இலங்கையின் கடுமையான மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் தொடர்பாக அதற்கு எதிராக கண்டனத் தீர்மானம் அண்மையில் மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்டபோது அதனை ஆபிரிக்க நாடுகள் உட்பட தனது ஆதரவு நாடுகளின் உதவியுடன் விவாதத்திற்கு எடுக்காமலேயே இலங்கை இழுத்தடித்து விட்டது.

மனித உரிமைகள் சபையில் தனக்குள்ள ஆதரவைக் கொண்டு இவ்வளவு காலமும் தனது காரியங்களை சாதித்திருப்பினும் தற்போது 192 உறுப்பினர்கள் கொண்ட பொதுச் சபையிலேயே இலங்கை தேர்தலை சந்திக்கவுள்ளது.

வல்லரசுகள் உட்பட உலக அரசியலை தீரமானிக்கும் சக்திகளின் வாக்குப் பலத்தை இலங்கை எதிர் நோக்கி நிற்கின்றது.

சபை அமர்வு ஒன்றின்போது இலங்கை மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் வெளியிட்டபோது, மனித உரிமைகளை பேணும் விடயத்தில் இலங்கை ஒரு முன்னு தாரணமான நாடு என்றும் எமக்கு ஒன்றும் இது விடயத்தில் பாடம் கற்பிக்க வேண்டாம் என்றும் இயலுமானால் வாக்களிப்பில் வென்று பாருங்கள் என்றும் இலங்கையின் ஐக்கிய நாடுகள் சபைக்கான தூதுவர் தயான் ஜெயதிலக சவால் விடுத்திருந்தார்.

இதற்கெல்லாம் 27 நாடுகளை கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் வாக்குகள் இன்று பதிலளிக்கவிருக்கின்றன. இதேவேளை அமெரிக்காவும், இலங்கை நியமிக்கப்படக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளதாக ஜெனிவா தகவல்கள் தெரிவிக்கின்றன.

மனித உரிமைகள் சபையில் தனது இருப்பு ஈடாடுவதை உணர்ந்து கொண்ட இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான குழுவினர் கடந்த சில மாதங்களாகவே நாடு நாடாக சென்று தமது தெரிவுக்கான பிரசார சந்திப்புக்களை மேற்கொண்டு வருவதாகவும் இந்தப் பிரசாரங்களில் விடுதலைப் புலிகளே இலங்கையில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல் சம்பவங்களுக்கு எல்லாம் பொறுப்பு என்று வார்த்தைக்கு வார்த்தை இடித்துரைத்து வருவதாகவும் அவை மேலும் தெரிவித்தன.

வெற்றி பெற்ற அங்கத்தவர்களுடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 8 வது கூட்டத் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 20 ஆம் திகதிவரை நடைபெறும். (ச-5)


### ஆனந்தி திருமண சேவை

**மணமகள் தேவை**

தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் காலசர்ப்ப தோஷமுடைய ஆட்சி பெற்ற 4இல் செவ்வாய்; அவிட்டம் நட்சத்திரம் கிரகபாவம் 36 3/4 உடைய 1974இல் பிறந்த உயரம் 5 அடி 10 அங்குலம் வனப்புமிக்க ஆணுக்கு உகந்த பெண்மணியைத் தேடுகிறோம். அஞ்சல், நேரடியாக 0212228708 டெலிபோன் மூலமும் தொடர்பு கொள்ளுங்கள். V.A சிவராசா ஜோதிடர், ஆனந்தி திருமணசேவை 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (1202)

### தேவை

குவைற்.டுபாய்.கட்டார்.போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் Salesman (supermarket) Security guard, Helpers, House maids இன்னும் பல வேலைவாய்ப்புகள். உடனடியாக போகக்கூடியதாக உண்டு மேலதிக விபரங்களுக்கு. **LOTUS JOBS BANK**. No.10,Rudra Mawatta Colombo 06. Tp: 0112361336.


## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை



காரைநகர் சத்திரந்தை களபூமியை பிறப்பிடமாகவும் இல.43/1, மணல்தறை வீதி, கந்தர் மடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை 20.05.2008 (செவ்வாய்க்கிழமை) சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (கொட்டைக்காட்டு சுப்பர்) தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், அமரர்களான முருகேசு (வையாபுரி) பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், மகேஸ்வரன், விக்கினேஸ்வரன் (லண்டன்), றட்ணேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வசந்தாதேவி, புஸ்பராணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிருபாலினி, தமிழினி (மாணவிகள், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), தனுசிகன் (ஞானக்குழந்தை பாலர் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.05.2008 (வியாழக்கிழமை) காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(1231)


# தரம் -5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள் 1

பகுதி -I
நேரம் -45 நிமிடம்


மு.விக்னேஸ்வரன் (அதிபர்)
சைவத்தமிழ் வித்தியாசாலை உரும்பிராய்

*1-3 வரையான வினாக்களில் முதல் மூன்று உருவங்களும் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையவை. அதோடு தொடர்புடைய உருவத்தை 4-8 வரையான இலக்கங்களிலிருந்தும் தெரிவுசெய்து அதன் கீழ்க்கோடிடுக.*


1) 1 2 3 4 5 6 7 8



2) 1 2 3 4 5 6 7 8




3) 1 2 3 4 5 6 7 8



கீழே தரப்பட்டுள்ள படங்களுடன் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

4) 5) 6)



| 4) | 5) | 6) |
|---|---|---|
| 1.கயிறு | 1.ஒலி | 1.கோழி |
| 2.கிடுகு | 2.ஒளி | 2.கிளி |
| 3.வினாகிரி | 3.ஒழி | 3.பாம்பு |
| 4.மேற்கூறியமூன்றும் | 4.மேற்கூறிய மூன்றும் | 4.கூறமுடியாது |

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

7) நிமால் ஒரு இடத்திலிருந்து 50m கிழக்காகச் சென்று அவ்விடத்திலிருந்து 25m வடக்கே சென்று பின் இடது பக்கமாக 50m சென்றான் எனின், அவன் புறப்பட்ட இடத்திலிருந்து எத் திசையில் நிற்கிறான்.
1) தெற்கு 2) வடக்கு 3) கிழக்கு 4)மேற்கு

8) இலங்கையின் புகையிரதச் சந்தி அல்லாதது
1) பொல்காவலை 2)மாகோ 3)வவுனியா 4)மதவாச்சி

9) ஒரே தடவையில் எட்டு விடயங்களை அவதானிப்பவர்
1) சதாவதானி 2) எட்டவதானி 3)தசாவதானி 4)அட்டவதானி

10) 60 கொய்யாப்பழங்களை, 4 பழங்களை 3 ரூபாவுக்கு வாங்கி 3 பழங்களை 4ரூபாவுக்கு விற்றால் அவனுக்குக் கிடைக்கும் இலாபம்
1) 25.00 2) 35.00 3) 45.00 4)20.00

**பின்வரும் கூற்றில் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து வெற்றுக் கூட்டில் எழுதுக.**

11) முதலெழுத்து பாட்டில் வந்தால் படத்தில் வராது இரண்டாம் எழுத்து அம்மாவிடம் உண்டு அப்பாவிடம் இல்லை மூன்றாம் எழுத்து புகையுடன் போகும் ..........................

**கீழேயுள்ள வினாக்களில் ஐந்து சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்கு முறைப்படுத்தினால் நடுவில் வரும் சொல்லின் கீழ் கோடிடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12) | பழம் | பிஞ்சு | பூ | காய் | மொட்டு |
| 13) | செவ்வாய் | வியாழன் | திங்கள் | புதன் | வெள்ளி |
| 14) | May | July | April | June | March |
| 15) | Four | Two | Six | Eight | Ten |

16) விமலனுக்கு மூன்று சகோதரிகளும் இரண்டு சகோதரர்களும் உள்ளனர் எனின், அவனது குடும்பத்திலுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது? ..........................

17) இராசையாவினுடைய மகன் நிலக். அவனுடைய தந்தையின் தாயினுடைய மகள் சோபனா எனின், சோபனா நிலக்கிற்கு என்ன உறவுமுறை? ..........................

**பொருத்தமான விடையின் கீழ்க்கோடிடுக.**

18) செம்பு நிறைய முத்து என்ற விடுகதையை விடுவித்தால் வருவது
1. நத்தை 2) வெண்டிக்காய் 3)மாதுளம்பழம் 4) தேன்கூடு

19) நாங்கள் பட்டத்தின் நூலை இழுத்துப் பிடித்தோம்.இதில் மறைந்துள்ள மிருகம்
1) யானை 2)பூனை 3)முயல் 4)நாய்

20) கடவுள் இல்லை என்று கூறுபவர்
1) ஆஸ்திகன் 2)விதண்டாவாதி 3)நாஸ்திகன் 4)விரோதி

**கடந்த 5 நாட்களாக ரூபன் கடையில் விற்கப்பட்ட தீப்பெட்டிகளின் எண்ணிக்கை வருமாறு:**

| 1ஆம் நாள் | 2ஆம் நாள் | 3ஆம் நாள் | 4ஆம் நாள் | 5ஆம் நாள் |
|---|---|---|---|---|
| 15 | 20 | 12 | 15 | 10 |

21) 5நாட்களிலும் எத்தனை டசின் தீப்பெட்டிகள் விற்பனை செய்யப்பட்டது? ...............

22) ஒரு தீப்பெட்டியின் விலை 2 .50 சதம் எனின், முழுத் தீப்பெட்டிகளினதும் விலை என்ன?..............................

23) விற்பனை செய்யப்பட்ட தீப்பெட்டிகளில் 1/4 பங்கு சூர்யா நெருப்புப் பெட்டிகள் எனின், விற்பனை செய்யப்பட்ட சூர்யா நெருப்புப் பெட்டிகள் எத்தனை டசின்?.........

24) ஒரு தீப்பெட்டியில் 45 குச்சிகள் இருந்தால் மொத்தமாக விற்பனை செய்யப்பட்ட பெட்டிகளில் எத்தனை குச்சிகள் இருக்கும்?..................................

25) தீப்பெட்டியின் வடிவத்தை எவ்வாறு அழைப்பர்?..........................

26)) ஆதிமனிதன் எவ்வாறு நெருப்பைப் பெற்றான்? ........................

**பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து புள்ளிக் கோட்டில் எழுதவும்.**

27) கனவு → நனவு என்பது போல உறவு .............
1) நட்பு 2)பகை 3)விருப்பு 4) வெறுப்பு

28) ஓநாய்→ நாய் தாமரை ........
1)பூ 2)கொடி 3)மரை 4)தாரை


29) 11 → 121, 12 ......
1)132 2)134 3)112 4)144

30) மேல்மாகாணம் → கொழும்பு, கீழ் மாகாணம் ..........................
1) திருகோணமலை 2) யாழ்ப்பாணம் 3) அனுராதபுரம் 4) வவுனியா


31) முகமது → பள்ளிவாசல், போல் அன்ரனி .............
1) கோயில் 2)தேவாலயம் 3) விகாரை 4)பள்ளிவாசல்

**முதலாம் இரண்டாம் கோலத்தை அவதானித்து மூன்றாவது கோலத்தை நிரப்புக.**


32)




33)




34) கீழே தரப்பட்டுள்ள படத்திலுள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை



**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் R எனவும் பிழையாயின் W எனவும் அடையாளம் இடுக.**

35) மரமொன்றை நடுவதால் நாடு அழகுபெறும் ....................

36) எல்லாப் பறவைகளும் பறக்கும் ....................

37) இடியப்பம் விரைவில் சமிபாடடையும் உணவாகும் ....................

38) சித்திரைப் புத்தாண்டை இந்துக்களும் கொண்டாடுவர் ....................

39) பாடசாலை இருபத்து நான்கு மணித்தியாலங்களாக செயற்படும் நிறுவனம் ஆகும். ....................

**கீழே தரப்பட்டுள்ளவைகளில் ஒன்று வித்தியாசமானது அதன் கீழ்க்கோடிடுக.**

40) காகம், கிளி, தூக்கணம் குருவி, கொக்கு

41) ஆந்தை, ஆட்காட்டிப் பறவை, மீன்கொத்தி,வௌவால்

42) பசு, மான், யானை, நரி

43) தேள், மட்டத்தேள், ஓணான், பூரான் பூச்சி

**கீழே தரப்பட்டுள்ள எழுத்துக்களிடையே இடைவெளிகளை நிரப்பி இரண்டு சொற்களை எழுதுக.**

44) | தக | - | - | லாரை |
1) ......................
2) ......................

45) | சூரி | - | - | னல் |
1) ......................
2) ......................

# சர்வதேச உதவிகளை அனுமதிப்பதற்கு மியான்மரின் அரசு இணங்கியுள்ளது

(யாங்கூன்)

சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தெற்காசிய நாடுகளின் ஒருங்கிணைப்புடன் வெளிநாட்டு உதவிகளை வழங்க சிங்கப்பூரில் நடைபெற்ற தென்கிழக்காசிய நாடுகளின் அவசர கூட்டத்தில் மியான்மர் இணங்கியுள்ளது.

சூறாவளியால் ஏற்பட்ட பாதிப்பு 10 பில்லியன் அமெரிக்க டொலர் என மியான்மர் கணக்கெடுத்திருப்பதாக ஆசியான் மாநாட்டில் கலந்து கொண்ட சிங்கப்பூர் வெளி விவகார அமைச்சர் ஜியோர்ஜ் ஜயோ தெரிவித்தார்.

ஆசியான் தலைமையிலான ஒருங்கிணைப்பு பொறி முறையை முன்னெடுப்பதற்கு வெளிவிவகார அமைச்சுக்கள் இணங்கியுள்ளன என்றார் அவர்.

சூறாவளியல் பாதிக்கப்பட்டவர்களுக் கான சர்வதேச உதவி வழங்கும் மாநாட்டை எதிர் வரும் 25 ஆம் திகதி மியான்மரின் முக்கிய நகரமான லன்கோனில் வைப்பது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து ஆராய்ந்து வருவதாக சிங்கப்பூர் வெளி விவகார அமைச்சர் கூறினார்.

தென்கிழக்காசிய நாடுகளின் மருத்துவக் குழுக்களை அனுமதிப்பதற்கும் மியான்மர்



இணங்கியுள்ளது என சிங்கப்பூர் வெளி விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை தொடங்கி சூறாவளியால் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மூன்று நாள் அரசு முறை துக்கம் அனுஷ்டிக்கப்படும் எனவும் மியான்மர் இராணுவ அரசு அறிவித்துள்ளது.

சூறாவளி தாக்குதல் இடம் பெற்று இரண்டரை வாரங்கள் கடந்த நிலையில் நாட்டின் தலைமை இராணுவத் தளபதி தான் ஷ்வே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஐராவதி பாசனப் பகுதிக்கு சென்று பார்வையிட்டுள்ளார்.

அங்கு அந்த இயற்கைப் பேரழிவு ஏற்பட்ட பிறகு மெதுவாகவே அவர்கள் மீட்புப் பணிகளைத் தொடங்கினார்கள் என்று அந்த அரசு மீது பரந்து பட்ட குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது.

சூறாவழித் தாக்குதலின் காரணமாக மியான்மரில் கிட்டத்தட்ட எண்பதாயிரம் பேர் பலியாகினர். (ஓ-5)

## உலக தரிசனம்

## வரதட்சணை மற்றும் சீர்வரிசைக்கு பாகிஸ்தானில் கட்டுப்பாட்டுச்சட்டம்

(இஸ்லாமாபாத்)

வரதட்சணை 30ஆயிரம் ரூபாயாகவும் சீர்வரிசை பொருட்களின் மதிப்பு 50ஆயிரம் ரூபாயாகவும் உச்சவரம்பு நிர்ணயித்து பாகிஸ்தானில் சட்டம்கொண்டு வரப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் மேல் சபையில் இச்சட்டம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. திருமணத்தின் போது வழங்கப்படும் வரதட்சணை பணம் எக்காரணம் கொண்டும் 30 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக இருக்கக் கூடாது. நிக்கானமா என்று அழைக்கப்படும் திருமணச் சான்றிதழ் பெறும் போது அத்துடன் வரதட்சணையாக அளிக்கப்பட்ட தொகை சீர்வரிசைப்பொருட்களின் பட்டியலையும் இணைத்து கை யெழுத்து பெற வேண்டும். விவாகரத்து செய்தால் வரதட்சணை பணத்தையும் சீர்வரிசை பொருட்களையும் மனை வியிடம் ஒப்படைக்க வேண்டும். அதற்கு திருமண சான்றிதழுடன் இணைக்கப்பட்டபட்டியல் உதவும். இதன் மூலம் விவகாரத்தின்போது நீண்ட சட்ட நடவடிக்கைகள் தவிர்க்கப்படும். இந்த சட்டத்துக்கு வரதட்சணை மற்றும் திருமண சீர்வரிசை கட்டுப்பாட்டுச் சட்டம் என்று பெயரிடப் பட்டுள்ளது. (ஓ-5)

## குண்டுத்தாக்குதலில் 11பொலிஸார் பலி

(பக்தாத்)

ஈராக்கில் பொலிஸார் சென்று கொண்டிருந்த மினிபஸ் மீது சன்னி தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 11 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

சிரியா நாட்டின் எல்லையில் உள்ள பாஜ என்ற இடத்தில் திங்கட்கிழமை மாலை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈராக் பொலிஸார் தெரிவித்தனர்.

அல்-கொய்தா தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கப் படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர். (ஓ-5)

# சீனாவில் பூகம்பத்தில் பலியானோருக்கு உணர்வுபூர்வமான அஞ்சலி செலுத்தப்பட்டது

(பிஜிங்)

பூகம்பத்தில் உயிரிழந்தோருக்கு சீனா முழு வதும் மூன்று நிமிட மௌன அஞ்சலி செலுத் தப்பட்டது. கடந்த வாரம் சீனாவின் சிசூவான் மாகாணத்தில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தில்பலியானவர்களின் எண்ணிக்கை 50ஆயிரமாக உயர்ந்து விட்டது. ஆயிரக்கணக் கானோர் இன்னும் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்கும் பணியும் முரமாக நடந்து வருகிறது.

மீட்பு பணி நிகழ்ந்த இடத்தில் மண் சரிவு ஏற்பட்டதால் 200க்கும் மேற்பட்ட மீட்பு குழுவினர் அதில் சிக்கி உயிரிழந்து விட்டனர். இந் நிலையில் பூகம்பத்தில் உயிரிழந்த வர்களுக்காக சீனா முழுவதும் மூன்று நிமிடமௌன அஞ் சலி செலுத்தப்பட்டது. புகழ்பெற்ற டினாமென் சதுக்கத்தில் இருந்து பூகம்பத்தால் உருக்குலைந்த சிசூவான் வரை அனைத்து பகுதி மக்களும் கண்ணீர் மல்க உருக்கமாக அஞ்சலி செலுத்தினர். மௌன அஞ்சலி செலுத்தப் பட்ட மூன்று நிமிடங்களும் நாடு முழுவதும் வாகன போக்குவரத்து நிறுத்தப்பட்டது. துக்கத்தை பிரதிபலிக்கும் விதமாக சீன தேசிய கொடி ஒரு வாரத்திற்கு அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது.

பொதுவாக சீனாவில் போரில் உயிரிழந்த வர்ளுக்கு மட்டுமே இது போன்ற நாடு தழுவிய மௌன அஞ்சலி செலுத்தப்படுவது வழக்கம்.

இதேவேளை ஓகஸ்ட் மாதம் அங்கு நடக்கவிருக்கும் ஒலிம்பிக் போட்டிக்காக நடைபெற்று வந்த ஒலிம்பிக் ஜோதி உலா நிலநடுக்கத்தால் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 3 நாட்களுக்கு ரத்து செய்துள்ளதாகவும் அத்துடன் 3நாட்கள் தேசம் முழுவதும் துக்கம் அனுஷ்டிக்கப்படுவதாகவும் சீன அரசு அறிவித்துள்ளது.

### தெரு நாய்களை கொல்ல அரசு உத்தரவு

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட சீன நகரான சிசூவான் நகரரில் தொற்று நோய்கள் பரவாமல் இருப்பதற்காக அங்குள்ள நாய்களை கொல்ல அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்துள்ளனர். சீனாவில் தென் மேற்கு மாகாணமான சிசூவானில் கடந்த 12ஆம் திகதி பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. இதில் 34ஆயிரம் பேர் பலியாயினர். பூகம்பத்துக்கு பலியானோர் எண்ணிக்கை 50 ஆயிரத்தை எட்டும் என்று எதிர்பார்ப்பதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. சிசூவான் என்ற நகரில் 2ஆயிரத்து 670பேர் பலியாயினர். மக்களை தொற்று நோயில் இருந்து பாதுகாப்பதற்காக நகரில் சுற்றி திரியும் அனைத்து தெரு நாய்களையும் கொல்வதற்கு அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்துள்ளனர். இந்நகரில் உள்பெரும்பாலான தெரு நாய்களுக்கு யாரும் உணவு அளிப் பதில்லை. பூகம்பத்திற்கு பின் இவை தெருக் களில் சுற்றி திரிகின்றன. அவை மனிதர்களோடு சேர்ந்து கொண்டு உணவுக்கு போட்டியிடும் மனிதர்களை கடித்து நோய் பரப்பும் வாய்ப்பு உள்ளன. இதனால் இந்நாய்களுக்கு விஷம் கொடுத்து கொல்லப்பட்டு ஆழமான இடங்களில் புதைக்கப்படும் என்று சின்குவா செய்திஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (ஓ-5)

# காகங்களை விரட்ட தனி பொலிஸ் படை ஜப்பான் தீவில் இப்படியும் அதிசயம்

(ஜப்பான்)



திருடர்களைப் பிடிக்க, பயங்கர வாதி களைச் சமாளிக்கத்தான் பாதுகாப்புப்படை அமைக் கப்படும். ஆனால் காகங்களை கண் காணித்து விரட்ட தனி பாதுகாப்புப் படை அமைந்துள்ள அதிசயம் பற்றி தெரியுமா? ஆம் ஜப்பான் நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள தீவு கைஷீ ஜப்பானில் காகங்கள் எண்ணிக்கை அதிகம் அது போல சுற்றியுள்ள தீவுகளிலும் காகங்கள் பல மடங்கு பெருகி விட்டன. தெருக்களில் நடக்க முடியவில்லை.

சாலைகளில் வாகனப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக உள்ளது. வீடுகளில் உள்ள குழந்தைகளை பதம் பார்த்து விடுகின்றன. இதையெல்லாம்விட இந்ததீவில் அடிக்கடி மின் தடை ஏற்பட காகங்கள் தான் காரணம் என்பது தான்அங்குள்ள மக்களுக்கு தீராத தலைவலியாக உள்ளது. உயர் அழுத்த மின் கம்பங்களில் காகங்கள் கூடு கட்டி விடுவதால் மின் சார விநியோகம் தடைப்படுகிறது. இதனால் மக்களுக்கு விநியோகம் செய்யப்படும் மின் சாரம் தடைப்படுகிறது. ஒவ்வொரு முறையும் காகங்கள் கூடு கட்டுவதை கண்டு பிடித்து தடுக்க வேண்டிய நிலை மின்சார ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ளது. கூடு கட்டினால் மட்டுமல்ல, பாதிசாப்பிட்ட மாமிச துண்டு உட் பட் சில பொருட்களையும் மின் கம்பம் மீது போட்டு சென்று விடுகின்றன காகங்கள்.

இதனாலும் மின் விநியோகம் பாதிக்கப் படுகிறது. இதனால் தீவில் காகங்களை கண் காணிக்க தனி பாதுகாப்புப் படை அமைக்கப் பட்டுள்ளது. இந்தப் படையினரின் பல சாலைகளிலும் மின்சார கம்பிகள் செல்லும் பகுதிகளில் காகங்கள் உட்காராமல் விரட்டியபடி உள்ளனர் வட அமெரிக்க பகுதிகளில் உள்ள காகங்கள் தான் பருந்து அளவுக்கு பெரிதாக குரூரமாக இருக்கும் என்று சொல்வதுண்டு. ஆனால் அதைவிட மிகப் பெரிய அளவில் காகங்கள் இந்த தீவில் இருக்கின்றன. அதனால் அவற்றிடம் இருந்து குழந்தைகளை பாதுகாப்பது பெரும் பிரச்சனையாகவும் உள்ளது.

ஜப்பான் நாட்டில் எந்தப் பகுதியிலும் காகங்களைக் காணலாம். மனிதர்களுடன் சாலைகளில் காகங்களும் செல்வதை சகஜமாகப் பார்க்முடிகிறது. (ஓ-5)

# அலகு ஒடிந்த கழுகுக்காக செயற்கை அலகு தயாராகின்றது

## அமெரிக்க விஞ்ஞானிகளின் சாதனை

(நியூயோர்க்)

அலகு ஒடிந்து தவித்துக் கொண்டிருந்த கழுகுக்கு செயற்கை அலகு பொருத்த அமெரிக்க மருந்துவ நிபுணர்கள் முடிவு செய்துள்ளனர். அமெரிக்காவில் உள்ள அலாஸ்கா மாநில காட்டில் இந்த கழுகை நிபுணர்கள் கண்டுபிடித்தனர். இதன் மேல் அலகு ஒடிந்து தொண்டைக்குழி வெளியே தெரிந்தது. கழுகு போன்ற பறவைகளுக்கு அலகு தான் மிக முக்கியமானது.

அலகு மூலம் தான் இரையை கொத்தி சாப்பிட முடியும். அலகு இல்லாவிட்டால் இரை சாப்பிட முடியாதது மட்டுமல்ல, சீக்கிரத்தில் இறந்தும் விடும்ஆபத்து உள்ளது. நிபுணர்கள் கண்டுபிடித்தபோது இந்த கழுகு உயிருக்கு போராடிக் கொண்டிருந்தது. அதை வன விலங்கு சரணாலயத்தில்பாதுகாப்பாக அடைத்து அதற்கு அவ்வப்போது உணவு கொடுத்தனர். இப்படியே விட்டால் அது விரைவில் இறந்து விடும் என்பதால் அதற்கு செயற்கை அலகு பொருத்த நிபுணர்கள் முடிவு செய்த னர். அதற்காக மருத்துவ பொறியியல் தொழில் நுட்ப நிபுணர் கான்ட்வெல் ஆய்வு செய்தார்.

இதன் விளைவாக செயற்கை அலகு தயாராகி வருகிறது. நைலோன் இழைகளால் ஆன



செயற்கை அலகு வடிவமைக்கப்பட்டு வருகிறது. இது அடுத்த மாதம் பொருத்தப்படும். செயற்கை அலகால் இந்த கழுகு 50ஆண்டுக்கு மேல் உயிர் வாழும் என்று நிபணர்கள் தெரிவித்தனர். (ஓ-5)

# எண்ணெய் விலை உயர்வால் சைக்கிள் பாவனை அதிகரிப்பு

(கலிபோர்னியா)

எரிவாயு கச்சா எண்ணெய் விலை உயர்வால் அமெரிக்கர்கள் சைக்கிளை பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது. சிலர் தங்களிடமுள்ள பழைய சைக்கிளை பழுது பார்க்கவும் சிலர் புதிதாக வாங்கவும் தொடங்கியுள்ளனர்.

கலிபோர்னியாவில் உள்ள கோஸ்டா மேசா சைக்கிள் அசோசியேஷன் செயல் இயக் குனர் ப்ரன்ட் கிளெமென்ட்ஸ் கூறுகையில், அமெரிக்காவில் ஆண்டுக்கு 10 லட்சத்து 80 ஆயிரம் சைக்கிள்கள் விற்பனை செய்யப்படு கின்றன.

இனி வரும் ஆண்டுகளில் இந்த விற்பனை அதிகரிக்கக் கூடும். பெரும்பாலானோர் நீண்ட நாட்கள் உபயோகிக்காத சைக்கிள்களை திருத்தம் செய்து கொள்கின்றனர் என்றார் வேர்ஜினியாவை சேர்ந்த ஒரு ஆசிரியை. நான் ஒரு சைக்கிளை வாங்கியுள்ளேன். வீட்டிலிருந்து பள்ளிக்கு சென்று வர சைக்கிளை நான் உபயோகிக்க எண்ணியுள்ளேன். என் வீட்டிலிருந்து பள்ளி 13கி.மீ தொலைவில் உள்ளது என்றார். வாகனங்களுக்கான எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய் விலை உயர்வால அமெரிக்க மக்கள் சைக்கிள் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது. (ஓ-5)

மனித இனம் பெருந்தன்மையானதுதான். ஆனால் மனிதர்கள் சிறுமையுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

–ஸ்பெயின்

வலம்புரி

## பிரதமரின் பிறழ்வு; அரசியலுக்கும் அறுபதில் ஓய்வு கொடுக்கலாமோ

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறியுள்ளார்.

பாகிஸ்தான் தூதரகத்தினால் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு பிரதமர் கூறியுள்ளார்.

இலங்கையிலும் பாகிஸ்தானிலும் பயங்கரவாதப் பிரச்சினை இருப்பதாக பிரதமர் கூறியிருப்பதும், முன்னதாக ஈரானிய ஜனாதிபதியை இலங்கைக்கு வரவழைத்ததுமான நடவடிக்கைகள், முஸ்லிம் நாடுகளுடன் உறவை மேற்கொள்வதிலும் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகளை தூக்கி எறிவதற்கும் இலங்கை தயாராகி வருகிறது என்பதை கோடி காட்டுகின்றது.

அதனடிப்படையிலேயே இலங்கையிலும், பாகிஸ்தானிலும் பயங்கரவாதப் பிரச்சினை இருப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

பாகிஸ்தானை பொறுத்தவரை அங்கு இராணுவ ஆட்சி நடக்கின்றது. தேர்தல், பதவியேற்பு என்பன ஒரு புறத்தில் நடந்தாலும் முஷாரப் என்ற சர்வாதிகாரியின் ஆட்சியின் கீழ் பாகிஸ்தான் ஏராளமான மனித உயிர்களை பலி கொடுத்து விட்டது.

தேர்தல் களத்தில் பிரசாரத்தில் ஈடுபட்ட பெனாசிர் பூட்டோவுக்கு நடந்த கொடூரம், ஆட்சியாளரின் பயங்கரவாத நடவடிக்கை என்பது மூடி மறைக்கப்பட்ட உண்மை.

இந்த உண்மைகளுக்கு மத்தியில் இலங்கை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறுகிறார், 'இலங்கையிலும் பாகிஸ்தானிலும் பயங்கரவாத அச்சுறுத்தல் உண்டு' என பிரதமரின் கூற்றின் அடிப்படையில் அவர் கூறும் பயங்கரவாதம் 'அரச பயங்கரவாதத்தை' விளிக்கின்றதா? என்ற கேள்வி எழுவதில் நியாயப்பாடு இருக்கவே செய்கின்றது.

பாகிஸ்தானின் தொந்தரவால் இந்தியா மிக மோசமான பாதிப்புக்களை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றது. இந்நிலையில் பாகிஸ்தானில் பயங்கரவாதம் இருப்பதாக ஒரு நாட்டின் பிரதமர் கூறும்போது அவர் பற்றிய கணிப்பீட்டை மேற்கொள்வதற்கு வாய்ப்பாக இருப்பதுடன், அரசியலிலும் அறுபது வயதில் ஓய்வு கொடுப்பது நல்லது என்ற சிந்தனையை தூண்டுகின்றது.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என கூறிய பிரதமர் இப்போது, பாகிஸ்தானையும் தம்பக்கம் இழுத்து பயங்கரவாதப் பிரச்சினை இருப்பதாக கூறி அந்த நாட்டில் ஆயுத கொள்வனவை மேற்கொள்ள நியாயம் தேடுகின்றார். இத்தகைய சிறுமைத்தனங்கள், நாட்டிற்கு ஆரோக்கியமானதல்ல என்பதை பொறுப்பான பதவியில் முதுமை வயதிலுள்ள அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

# கிழக்கில் தேர்தலைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட முடிவுகள் தமிழ் சமூகங்களுக்கிடையே வேற்றுமையை வளர்க்கலாம்

## அமைச்சர் சந்திரசேகரன்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தற்காலிகமாக அரசியல் இலாபத்துக்காக எடுக்கப் படும் அவசர முடிபுகள் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு பெரும் கேடுகளை விளைவிக்கும். இதனை மனதில் கொண்டு சிறுபான்மை தமிழ் அமைப்புக்களும் முஸ்லிம் அரசியல் தலைமைகளும் அவசரமாக கூடிப் பேச வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலை வரும் சமுதாய அபிவிருத்தி சமூக அநீதி ஒழிப்பு அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபை தேர் தலின் பின்னரான நிலை குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதை வரலாறு நிரூபிக்கின்றது. கிழக்கு மாகாணத் தில் கணிசமாக வாழ்கின்ற இஸ்லாமிய தமிழ் பேசும் மக்களும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதைத்தான் கடந்த கால வரலாறு உறுதிப்படுத்துகின்றது.

வடக்கு கிழக்கு இணைந்த தமிழீழம் தனி நாடாக ஆக வேண்டும் என்ற கோரிக்கை எழுந்த போது கூட முஸ்லிம் மக்கள் தங்களுடைய மத, கலாசார, பாரம்பரிய தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் அரசியல் ரீதியாக அவர்களுக்கு கிடைக்க வேண்டிய அந்தஸ்தைப் பற்றியும் மட்டுமே வலியுறுத்தி வந்திருக்கின்றனர் என்பது சரித்திர உண்மையாகும்.

வடக்கையும் கிழக்கையும் தனித்தனியான மாகாணம் என்ற முடிவைநீதி மன்ற தீர்ப்புத்தான் ஏற்படுத்தியது. தற் போதைய கிழக்கு மாகாணத் தேர்தல் தொடர்பாகவும் அத்தேர்தல் முடிவு தொடர்பாகவும் விமர்சனத்திற்குரிய பல விடயங்கள் உள்ளடங்கியிருக்கின்றன என்பதை மலையக மக்கள் முன்னணி கவனத்தில் கொண்டுள்ளது.

ஆயினும் நிச்சயமற்ற தன்மையில் ஏற்பட்டிருக்கின்ற தேர்தல் முடிவுகள் தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் மத்தியில் இன வாதக் குரோதத்தை ஏற்படுத்தி விடக் கூடாது.

இதில் தற்காலிக அரசியல் இலாபத்திற்காக எடுக்கப்படும் முடிவுகள். தமிழ், முஸ்லிம் சமூகத்திற்கு பெரு மளவு கேடுகளை விளைவிக்கும் என்பதை அரசியல் தலைவர்களும் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே சிறுபான்மை மக்களாக இருக்கின்ற நாம் புரிந்துணர்வோடு கலந்து பேசி சமரச உடன்பாட்டிற்கு வருவது மட்டுமே நம்முடைய எதிர் கால அரசியலுக்கும் சமூக பாதுகாப்பிற்கும் அத்தியாவசியமானதாக அமையும்.

இதனை மனதில் கொண்டு அனைத்து சிறுபான்மை தமிழ் அமைப்புக்களும் முஸ்லிம் அரசியல் அமைப்புகளும் அவசரமாக கூடிப் பேச வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதை மலையக மக்கள் முன்னணி பணி வோடு வலியுறுத்த விரும்புகின்றது.

(ஓ-5)

# சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காணாவிடில் தொழிற்சங்க நடவடிக்கை தீவிரமாகும்

## ஆசிரியர் சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

ஆசிரியர்கள் அதிபர்களின் சம்பளப் பிரச்சினைக்கு எதிர்வரும் ஜூன் 15ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு காணப்படாத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் தீவிரமாக இறங்கப்போவதாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளன.

க.பொ.த.சாதாரண தரம் க.பொ.த. உயர்தரம் உட்பட பொதுப் பரீட்சைகளின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடுவதில்லை என முற்றாக புறக்கணிக்கவும் வகுப்பறைக் கற்பித்தல் கடமைக்கு புறம்பாக வேறெந்த கடமை பொறுப்புக்களையும் பாடசாலைக் கடமை நேரத்தில் மேற்கொள்வதை தவிர்க்கவும் திட்டமிட்டுள்ளது.

ஆசிரியர் தொழிற்சங்கத்தின் கூட்டு அமைப்பான அதிபர் ஆசிரியர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கொழும்பு கோட்டையிலுள்ள குருகெதர (ஆசிரியர் இல்லம்) மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இது தொடர்பில் அறிவிப்பு செய்யப்பட்டது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை முஸ்லிம் ஆசிரியர் சங்கம், இலங்கை தரம் பெற்ற அதிபர்கள் சங்கம், ஜாதிக குரு சேவ சங்கம் உட்பட இலங்கையிலுள்ள பத்துக்கு மேற்பட்ட ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண் டனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசேப் ஸ்ரான்லின் விபரிக்கையில்,

ஆசிரியர் அதிபர்களின் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு விடயத்தில் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மிகவும் முனைப்போடும் விழிப்புணர்வோடும் களத்தில் இறங்கியுள்ளனர்.

ஆசிரியர்கள் அதிபர்களின் சம்பள பிரச்சினை தொடர்பாக கடந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பொருத்தமான தீர்வு காணப்படும் என முன்பு அறிவிக்கப்பட்டது. ஆனால் எந்தவிதமான தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

ஆசிரியர் அதிபர்கள் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு தொடர்பான கடந்த மார்ச் 4 ஆம் திகதி தேசிய சம்பள நிர்ணய பதவி ஆளனி ஆணைக் குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்டு ஆசிரியர் தொழிற் சங்கங்கள் பதில் கோரப்பட்டது. மார்ச் 17ஆம் திகதி ஆசிரியர் தொழிற் சங்க ஒருமித்த குரலில் பதிலைச் சமர்ப்பித்தனர்.

கடந்த வாரம் ஆசிரியர் தொழிற் சங்கங்களுக்கும் தேசிய சம்பள நிர்ணய பதவி ஆளணி ஆணைக்குழுவுடன் நடை பெற்ற சந்திப்பில் அரசாங்கமும் தேசிய சம்பள நிர்ணய ஆணைக் குழுவும் இணைந்த நிலையில் காலங் கடத்துவதையும் சம்பளப் பிரச்சினையை இழுத்தடிப்பதையும் தெளிவாக அவதானிக்க முடிந்தது.

இந்த நிலையில் தேசிய சம்பள சிசிர்ணய பதவி ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான திட்டங்கள் இல்லை என்பது தெளிவாக கண்டுணரப்பட்டதை அடுத்து சந்திப்பை இடைநிறுத்தி ஆசிரியர் தொழிற்சங்கள் வெளியேறின. ஆசிரியர் தொழிற்சங்கங்களின் நிலைப்பாடு தொடர்பாக ஜனாதிபதிக்கும் கல்வி அமைச்சுக்கும் தேசிய சம்பள நிர்ணய பதவி ஆளணி ஆணைக்குழுவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று கூறினார். (ஓ-5)

# யாழ். மருந்துக் காப்பகத்தில் மருந்துகளை குளிரூட்டி பாதுகாப்பதற்கான புதிய காப்பகம்

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனத்தின் நிதியதவியுடன் வடபிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மருத்துவக்காப்பகத்தில் மருந்துகளை குளிரூட்டி பாதுகாப்பதற்கான புதிய காப்பகம் ஒன்று நிறுவப்படவுள்ளதாக யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இக் குளிரூட்டி மருந்துகளைப் பாதுகாக்கும் காப்பகம் அமைப்பதற்கான பொருட்கள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவற்றை பொருத்துவதற்கான தொழில்நுட்பவியலாளர்கள் கொழும்பிலிருந்து அழைத்து வரப்பட்டு விரைவில் நிறுவப்படுமெனவும் குறிப்பிட்டார் .

யாழ் .பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் மருந்துக் காப்பகம் யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## செய்தி இணையத்தளங்களை குழப்பும் அரசின் புதிய அலுவலகம்

இலங்கையில் இருந்து செயற்படும் செய்தி இணையத்தளங்களை கண்காணிப்பதற்கென அரசு புதிய அலுவலகம் ஒன்றை உருவாக்கியுள்ளதாக தெரிவித்துள்ள "லங்கா டி செண்ட் " என்ற இணையத்தளத்தின் அதிகாரி ஒருவர். குறிப்பிட்ட அலுவலகத்தை பயன்படுத்தி அரசு தமது இணையத்தள சேவை களை செயலிழக்கச் செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர ஊடக இயக்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் "லங்கா டி சென்ட்" செய்தி இணையத்தளத்தின் பேச்சாளர் ருவான் பேர்டினன்ட்ஸ் இதனைத் தெரிவித்தார். (ஓ)

## ஓலைச் சுவடிகள் 31

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### மன நிம்மதியிருந்தால் உடல் சுகம் அடையுமா?

மனித மனதில் சமதானமிருந்தால் உடலுக்கும் சுகமே என்று முதியோர்கள் அடிக்கடி கூறுவதுண்டு. இதன் பொருளாவது நோய்கள் வராமலிருக்க மனதை சீர்செய்து நிறுத்த வேண்டும். மனதை நிம்மதியின் பாதைக்கு செலுத்தினால் அது உடலை நிம்மதியின் பாதைக்கு செலுத்தும்.

மனிதனை பாதிக்கும் பல நோய்களுக்கும் காரணம் நிம்மதியின்மையே என்று விஞ்ஞானம் உறுதி செய்துள்ளது. நிம்மதி இழந்து மனப்பாரம் அதிகரிப்பதனால் உடலைப் பாதிக்கும் ஒரு நோயான "அல்சர்" குறித்து மருத்துவத்துறை க்ண்டறிந்த உண்மைகள் பிரசித்தமானவை "டென்ஷன்" அதிகாரிக்கும் போது உடலில் "ஹைட்ரெக்லாரிக் அசிட்" உற்பத்தியும்அதிகரிக்கின்றது. இந்த அமிலம் சிறு குடலின் "ம்யூஸ்" கவசத்தில் பாதிப்புண்டாக்கி குடல் தசைகளில் இரணங்களை உருவாக்குகின்றது. இரணங்கள் வளர்ந்து "அல்சர்" ஆகவும் சில நேரம் "கான்சர்" ஆகவும் மாற்றமடைகின்றன.

இவ்வாறு மனிதனை பாதிக்கும் நோய் கள் சைக்கோசமாடிக் நோய்கள் என்று அழைக்கப்படும். மனதிலுள்ள பாதிப்பு வளர்ந்து உடலில் நோயாக உருவெடுக்கும் சூழ் நிலையே இது.

# முதலமைச்சர் ஆக்க வேண்டுமென மோனகுருசாமி கோரிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்கு அனுபவம் எதுவும் இல்லாத பிள்ளையானை விட நிர்வாகத்துறையில் நிரம்பிய அனுபவத்தைக் கொண்ட தானே மிகவும் பொருத்தமானவர் எனத் தெரிவித்துள்ளார் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் ஆர்.மோனகுருசாமி.

மாகாண சபை உறுப்பினராக அல்லாது கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் பதவிக்குத் தன்னையே நியமிக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றார்.

பிள்ளையான் குழுவின் சார்பில் போட்டியிட்டு ஆளும் கட்சியின் போனஸ் ஆசனங்களில் ஒன்றுக்கு நியமிக்கப்பட்ட மோனகுருசாமி அதனை ஏற்க மறுத்துவிட்டார். இது தொடர்பாக பி.பி.ஸியின் சிங்கள சேவை அவரிடம் கருத்துக் கேட்டபோதே அவர் முதலமைச்சர் பதவியே தனக்குத் தரப்பட வேண்டும் எனத் தெரிவித்திருக்கின்றார். (ச-5)

## மன்னாரில்...

தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை 1.15 மணியளவில் மன்னார் தொலைத்தொடர்புக் கோபுரச் சந்தியில் அமைந்துள்ள படையினரின் காவலரண் மீது கைக்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து சுமார் 15 நிமிடங்களாக அப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இத் தாக்குதலில் தமது தரப்பில் எவரும் பாதிக்கப்படவில்லை என்று படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 6 மணி முதல் படையினர் மன்னாரில் மிகப் பெரிய சுற்றி வளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

மன்னார் சவுத்பார் படை முகாமை அண்மித்துள்ள பள்ளிமுனை மற்றும் நளவன்பாடி ஆகிய இடங்களையே படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

தேடுதலில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## ஜனாதிபதி...

பிள்ளையானும் ஜனாதிபதியுடன் லண்டன் செல்வதற்கான பயண ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டு வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து செய்தி வெளியாகியுள்ளது.

இந்த ஏற்பாடு உளவுத்துறை மற்றும் ஜனாதிபதியின் மிக நெருங்கிய அமைச்சர்கள் மட்ட ஆலோசனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாக நம்பப்படுகிறது.

இதேவேளை பிள்ளையானை லண்டனுக்கு அழைத்துச்சென்று ஈழத் தமிழரின் தலைவர் என்று உலகுக்கு அறிமுகப்படுத்த ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ச-5)


# திருமண வாழ்த்து

இன்று புதன்கிழமை 21.05.2008 நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் திருமண பந்தத்தில் இணையும்

பிரபாகரன்



றேணுஜா

தம்பதிகள் எம்பெருமான் திருப்பதி வெங்கடாசலபதியான் அருட்கடாட்சத்தைப் பெற்று பல்லாண்டு காலம் சீருஞ் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்க வளமுடன்

வாழ்த்துவோர்;

12, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.

விவேகானந்தக் குருக்கள்
பிரணவன்

(1232)





மல்லாகம் தெல்லியம்பற்றை

## ஸ்ரீ ஞான வைரவர் சுவாமி ஆலய

## வருடாந்த பெரும் பொங்கல் விஞ்ஞாபனம்

**வைரவப் பெருமான் அடியார்களே!**

நிகழும் மங்கலகரமான சர்வதாரி வருஷம், வைகாசி மாதம், 3 ஆம் நாள் (16.05.2008) வெள்ளிக்கிழமை விளக்கு வைக்கும் பூஜையும் வைகாசி மாதம் 10 ஆம் நாள் (23.05.2008) வெள்ளிக்கிழமை விஷேச பூஜையும் அதனைத் தொடர்ந்து வைகாசி மாதம் 11 ஆம் நாள் (24.05.2008) சனிக்கிழமை காலை 6 மணிக்கு வழுந்துப் பானை கட்டி விஷேச பூஜையுடன் பொங்கல் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து விஷேச அபிஷேகமும் நடைபெறும். அடியார்கள் அனைவரும் வருகை தந்து வைரவப் பெருமானின் அருள் ஆசி பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வீர்களாக.

பூசை குருக்கள்
**சரவணபவ குருக்கள்**
**ஆனந்தகுமார சர்மா**
துர்க்கையம்மன் கோவிலடி,
தெல்லிப்பழை.

உபயம்
**முருகேசு இரஞ்சன்**

(C-1156)


## தமிழ் மக்கள் கடத்தப்படும் சம்பவங்...

காணாமல் போதல் சம்பவங்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் சுதந்திரமாக வாழ்வதற்கு உரிமையுண்டு. அதனைப் பறிப்பதென்பது மனித உரிமை மீறலாகும். அண்மைக்காலங்களாக தமிழர் கடத்தல், கப்பம் பெறல், கொலைச் சம்பவங்கள் என்பன அதிகரித்துள்ளன.

இதனை ஒருபோதும் ஏற்க முடியாது. தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அத்தோடு கடத்தப்படுவது, கப்பம் பெறுவது, கொலைச் சம்பவங்கள் தொடர்பாக அரசு கவனம் செலுத்தி அவற்றைத் தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால் சர்வதேச மற்றும் தேசிய மனித உரிமை அமைப்புக்களை சந்தித்துத் தெளிவுபடுத்த ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு ஆர்ப்பாட்டங்களையும் நடத்தும்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப் படுவதாகச் சர்வதேச சமூகம் குற்றஞ்சாட்டுவதோடு உதவிகளை நிறுத்தவும் முயற்சித்து வரும் நிலையில் கடத்தல்கள் உட்பட மனித உரிமை மீறல்கள் அதிகரித்திருக்கின்றமை நாட்டுக்குப் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் என்றார். (ச-5)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

21.05.2008



தோற்றம்
13
11
1926

மறைவு
21
04
2008

## திருமதி கிருஷ்ணர் செல்லம்மா

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம்
நொந்து பெற்று பாராட்டி சீராட்டி
வளர்த்து பெரும் புகழ் பெற்ற தாயே!
31 நாள்கள் ஒன்றல்ல; ஆயிரம்தான்
ஆனாலும் ஓயாது ஒழியாது
உன்புகழும் உன் நினைவும் !
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்!

கட்டப்பிராய் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

என்றும் நின் நினைவுடன்
குடும்பத்தினர்

(C-1154)


## பொலிஸ் காவலரண் மீது...

கைக்குண்டுத் தாக்குதலில் மூன்று பொலிஸார் படுகாயமடைந்துள்ளனர்.

அப்பகுதியில் நடமாடிய தமிழீழ விடுதலைப்புலிகளின் குழுவினரே காலை 7.45 மணியளவில் இக் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றிருப்பதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதலில் மேற்படி காவலரண் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்த மூன்று பேரும் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தாக்குதலையடுத்து வவுனியா - மதவாச்சி ஊடாக மன்னார் செல்லும் வீதியில் படையினரும் பொலிஸாரும் இணைந்து கடும் தேடுதலை நடத்தியுள்ளனர். (ச-5)

## புலிகளின் மூத்த தளபதி...

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளின் ஒருவரான மரபுப் படைத்துறை விஞ்ஞானி என்று பலராலும் அவதானிக்கப்பட்டவரான பிரிகேடியர் பால்ராஜ் நேற்று மாரடைப்பினால் சாவடைந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆயுதப் பயிற்சியினை இந்தியாவில் 9-வது பயிற்சி முகாமில் பூரண இராணுவப் பயிற்சி பெற்ற தளபதி பால்ராஜ். முன்னாள் வன்னிப் பிராந்தியத் தளபதியாகவும் விடுதலைப் புலிகளின் படைத்துறைத் தளபதியாகவும் இருந்து வந்தவர்.


உயர்ச்சிப் பாதையில் இணைவதற்கு ஓர் அரிய வாய்ப்பு

தரம் 04 தொடக்கம் O/L வரை

35
1973 - 2008

இவ்வருடத்திற்கான அனுமதி வழங்கும் இறுதிச் சந்தர்ப்பம்

இன்று முதல் மே 31 வரை மட்டுமே

The Express Institute
Irupalai, Kopay
அதிபர்


உலக இராணுவ ஆய்வாளர்களாலும் உற்றுநோக்குநர்களாலும் மரபு வழிப் படையணியின் தளபதியாகவே மூத்த தளபதி பிரிகேடியர் பால்ராஜ் கவனிக்கப்பட்டு வந்தார். பிரிகேடியர் பால்ராஜ் தமிழீழ விடுதலைப் புலிகளால் 1991 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட முதலாவது மரபு வழிப் படையணியான சார்ள்ஸ் அன்ரனி படைப் பிரிவின் முதலாவது கட்டளைத் தளபதியாவார்.

1993 ஆம் ஆண்டுவரையும், 1995 தொடக்கம் 1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளிலும் அவர் அப் பொறுப்பை வகித்தார். தமிழர்களின் போரியல் திறமையை உலகிற்கு அறிவித்த வரலாற்றுச் சிறப்பு மிக்க 2000 ஆம் ஆண்டு ஆனையிறவுச் சமரில் முக்கிய பங்காற்றியவர்.

அமைதிப் பேச்சுக்களின் போது 2003 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் பிரிகேடியர் பால்ராஜுக்கு இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் மூன்று மாதங்கள் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

தனது உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் மன்னார் மற்றும் மணலாறு களமுனைகளில் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் என்று விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.? இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.05.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.